Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD
IATA
(C/421)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 13 வெள்ளிக்கிழமை (25.02.2011) பக்கங்கள் 12 ஓசை – 148

## வறிய குடும்பங்களின் பொருளாதார மேம்பாடு
### யாழில் புதிய செயற்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையிலுள்ள குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் குடும்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் (திவிநெகும) என்ற புதிய செயற்திட்டம் ஒன்றை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் முதற்கட்டமாக குடும்ப பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்துக்கான பயனாளிகளைத் தெரிவு செய்யும் ஆரம்பக்கட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய மீனவர் விவகாரம்
## ஐரோப்பிய ஒன்றியம் தீவிர அக்கறை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் ஊடுருவல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு விபரம் திரட்டியுள்ளது.

மேற்படி இந்திய மீனவர்களது அத்துமீறல்கள் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தாம் அறிக்கையிட இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இக்குழுவினர் யாழ். அரச அதிபருடன் நடாத்திய பேச்சுக்களின் போது மேற்படி (12 ஆம் பக்கம் பார்க்க)

## பெண்ணின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தீவகப் பகுதியிலுள்ள ஊர்காவற்துறையில் படைத்தரப்பின் காவலரணுக்கு அண்மையிலுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து பெண் ஒருவரின் உருக்குலைந்த சடலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இக் கிணறு அமைந்துள்ள பகுதியில் துர்நாற்றம் வீசியதை அடுத்து அப்பகுதி மக்கள் படைத்தரப்பினருக்கு தெரிவித்த தகவலின் அடிப்படையில் படைத்தரப்பினரால் இச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொதி ஒன்றினால் சுற்றப்பட்ட நிலையில் யாழ். ஊர்காவற்துறை அரச வைத்தியசாலையில் இச் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (11 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்தின்
# உள்ளூராட்சித் தேர்தலுக்கு இடைக்காலத் தடையுத்தரவு

(கொழும்பு)

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்தவேண்டாம் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருக்கின்றது.**

மேற்படி மன்றங்களுக்கான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் அனைத்தும் தேர்தல் திணைக் களத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

இதை ஆட்சேபித்து மேற்படி கட்சி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்திருந்தது.

இவ்வழக்கு மீதான விசாரணை நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் இடம்பெற்றது. இதன் போதே நீதிமன்றினால் மேற்படி இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. (11 ஆம் பக்கம் பார்க்க)



புது வியூகத்தை நோக்கிய தொழில்நுட்பம்...

## மீண்டும் இந்திய மீனவர்கள்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பகுதியில் மீண்டும் இந்திய மீனவர்கள் ரோலர் மூலம் மீன்பிடிக்கும் செயற்பாட்டினால் வடமராட்சி மீனவர்கள் பெரிதும் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்திய மீனவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் கடந்தவாரம் நடைபெற்று வந்த போதிலும் இவ்விடயம் பின்னர் சட்டநடவடிக்கைக்கு உட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் மீண்டும் இந்திய மீனவர்கள் ரோலர் மூலம் மீன்பிடிப்பது மட்டுமல்லாமல், அப்பகுதிக்குச் செல்லும் வடமராட்சி மீனவர்களைத் துரத்துவதாகவும், (11 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாவில் தொடரும் அபிவிருத்தி



(யாழ்ப்பாணம்)

மகிந்த சிந்தனைத் திட்டத்தின்கீழ் யாழ். மாவட்டத்தில் மேலும் பல செயற்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. இவை இன்றுமுதல் பயனாளிகளின் பாவனைக்காக திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான அரசின் உயர்மட்ட அமைச்சர்கள் குழாம் ஒன்று இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் (12 ஆம் பக்கம் பார்க்க)



## தொழில் முயற்சிக்கான செயற்திட்டங்கள் தேவை
### புனர்வாழ்வு ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வருமானத்தை ஈட்டித்தரக் கூடிய தொழில்வாய்ப்புக்களை வழங்கும் வகையிலான புதிய செயற்திட்டங்களை வடக்கில் ஆரம்பிக்கும்படி சர்வதேச தொண்டு நிறுவனங்களிடமும் நன்கொடையாளர்களிடமும் அரசு கோரிக்கைகளை முன் வைத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் எதிர்காலத்திற்காக இந்தியாவை ஒதுக்கமுடியாது

(கொழும்பு)


இலங்கையின் எதிர்காலம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் இந்தியா தவிர்க்கப்பட முடியாத ஒரு நாடு என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியா இலங்கைக்கு பல வகையிலும் ஒத்துழைப்பை வழங்கியதாகவும், பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு சர்வதேச சமூகத்தின் ஆதரவு சிறந்த முறையில் கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு ரோட்டரிக் கழகத்தின் மாதாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தனதுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கை குறித்து சர்வதேச சமூகத்திற்கு சிறந்த முறையில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மனிதாபிமான நடவடிக்கையின் எந்தவொரு கட்டத்திலும் இராணுவத்தினர் யுத்தக்குற்றத்தில் ஈடுபடவில்லை. யுத்தக்குற்றம் இடம்பெற்றதாக கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த நாட்டில் பயங்கரவதம் தோற்கடிக்கப்பட்டமைக்கு 2005 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட தேர்தலில் பெற்ற வெற்றி முக்கிய காரணமாகும். அக்காலத்தில் முதலில் நாங்கள் புலிகளின் பின்னணியை ஆராய்ந்தோம். அப்போது போர் நிறுத்த (11 ஆம் பக்கம் பார்க்க)



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய இரட்டை கதவு ஆழ் குளிரூட்டிகள் 5 விற்பனைக் குண்டு. தொடர்பு:- 0773946487 - 0214591042

(C/479)

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தர வாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங் கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)


# யாழ். மாநகரசபையில் சூடுகிளப்பும் விவாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும இடையே நேற்றைய மாதாந்தக் கூட்டத்தின் போது நாவற்குழி யில் குடியேறியுள்ள சிங்களக் குடியேற்றம் தொடர்பாகவும் யாழ். மாநகரசபையின் மேலதிக தொழிலாளர்கள் தொடர்பாக வும் காரசாரமான விவாதங் களும் வாய்த்தர்க்கங்களும் இடம்பெற்றன.



அத்து மீறி நாவற்குழிப்பகுதி யில் தேசிய வீடமைப்பு அதிகா ரசபையின் காணியில் குடியேறி யுள்ள சிங்களக் குடும்பங்கள் தொடர்பாக அவர்களது நடவ டிக்கை இனமுரண்பாடுகளைத் தோற்றுவித்து பகைமை உணர்வை வளர்க்கும் என்று கூறி இதற்கு யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரி யாழ். மாநகரசபை எதிர்க்கட்சி தீர்மானம் கொண்டுவந்தது. இதற்கு ஆதரவு தெரிவித்த ஆளும் கட்சியினர் யாழ். மாநகர சபைக்கு வெளியே நடை பெறும் விடயங்களை சபைக்கு கொண்டுவருவதனை விடுத்து வேறு விடயங்கள் பற்றிவிவா திக்கலாம் என்று சபைக்கு ஆலோசனை தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இருசாரா ரிடையேயான விவாதங்கள் கார சாரம் நிறைந்ததாக மாறியது. இதற்குப்பதிலளித்த எதிர்க்கட் சியின் உறுப்பினர் விந்தன் கன கரத்தினம் தெரிவிக்கையில், நாங்கள் தமிழ்த்தேசியக்கூட்ட மைப்பு சார்பில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மக் களின் பிரச்சினைகளை முதன் மைப்படுத்துவதில் என்ன தவறு இருக்கின்றது. மாநகரசபை அதன் எல்லைப் பரப்பிற்கு வெளியே சென்று மக்களுக்கு சேவை வழங்கலாம் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான இருதரப்பின ரது விவாதங்களும் தொடர்ந் தன. இதேவேளை யாழ். மாந கரசபையில் மேலதிகமாக உள்ள தொழிலாளர்களை பணி யில் இருந்து நிறுத்துவது தொடர்பாகவும் இருதரப்பினரி டையேயும் காரசாரமான விவா தங்கள் இடம்பெற்றன.

யாழ். மாநகரசபை மேலதிக தொழிலாளர்களுக்கு செலவு செய்யும் நிதியை அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்த லாம் என எதிர்க்கட்சியினரால் ஆலோசனை தெரிவிக்கப்பட் டது. அதற்கு மேலதிக தொழி லாளர்களை பணிநீக்கம் செய்வ தால் அவர்களது குடும்பங்கள் பாதிக்கப்படும் என ஆளும் கட்சியினர் வாதிட்டனர். இவ் விடயத்தில் தலையிட்ட முதல் வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இவ்விடயம் தொடர்பாக இருசாராரிடையே யும் வாக்கெடுப்பிற்கு உத்தர விட்டார்.

இதன்மூலமான தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. (பா)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

# இராமநாதன் நுண்கலைக்கழகம்

## நுண்கலைமாணி - சங்கீதம் / நடனம் / சித்திரமும் வடிவமைப்பும் கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2010 / 2011

## தகுதிகாண் (செய்முறை) பரீட்சை

மேற்படி கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான தகுதிகாண் (செய்முறை) பரீட்சைகள் கீழ்வரும் திகதிகளில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

| கற்கைநெறி | பரீட்சைகள் நடைபெறும் திகதி | பரீட்சை மண்டபம் | நேரம் |
|---|---|---|---|
| இசை | 07.03.2011<br>08.03.2011<br>09.03.2011<br>10.03.2011<br>11.03.2011<br>14.03.2011 | இசைத்துறை விரிவுரை மண்டபம், இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப.9.00<br>பி.ப.4.00 |
| நடனம் | 07.03.2011<br>08.03.2011<br>09.03.2011<br>10.03.2011<br>11.03.2011 | நடேசர் அரங்கு, இராமநாதன் நுண்கலைக்கழகம், மருதனார்மடம், சுன்னாகம். | மு.ப.9.00<br>பி.ப.4.00 |
| சித்திரமும் வடிவமைப்பும் | 12.03.2011 | இராமநாதன் மண்டபம், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி.<br><br>முகாமைத்துவ மண்டபம்,<br>யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி<br><br>கலைப்பீட புதிய மண்டபம், யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி. | மு.ப.9.00<br>பி.ப.3.45 |

தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டை அனுப்பப்பட்டவர்களது பெயர் விபரத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையிலும், www.jfn.ac.lk என்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணையத் தளத்திலும் காணலாம்.

குறிப்பு:
2010 க.பொ.த உ/த பரீட்சையில் இசை அல்லது நடனம் அல்லது சித்திரம் ஆகிய பாடங்களில் "C" தரத்திற்கு குறைவான பெறுபேறு பெற்றவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான ஆகக்குறைந்த தகைமை "No" எனக் கொண்டிருப்பவர்களும் தகுதிகாண் செய்முறைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதியற்றவர்கள் என்பதை கருத்திற்கொள்ளவும்.

**சித்திரமும் வடிவமைப்பும் பரீட்சைக்கு கொண்டு வரவேண்டிய பொருட்கள்**

- Drawing Board (Minimum Size 18"x12")
- Drawing Pins
- Poster Colour
- Eraser
- Sharpener
- Brushes
- Ruler
- Pencil (6B,HB)
- Water Colour
- Pallet (For Water Colour)
- Water Container

அனுமதி அட்டைகள் தபாலில் கிடைக்காத விண்ணப்பதாரிகள் 03.03.2011ஆம் திகதிக்கு பின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ அனுமதிகள் உடன் 0212226714 என்ற தொலைபேசி எண் வழியாகத் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
24.02.2011

(C/478)

# அரசாங்க அறிவித்தல்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் சபையின் பொதுக்கூட்டம் - 2011

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் சபையின் பொதுச் கூட்டம் நாளை 2011.02.26ஆம் திகதி காலை 10.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், புதிய அறங்காவலர் களைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பும் நடைபெறும்.

வாக்காளர் அட்டைகள் இன்றையதினம் பிற்பகலிலிருந்து ஆலயத்தில் விநியோகிக்கப்படும்.

வாக்கெடுப்புக்கள் யாவும் முற்பகல் 11.30 மணிக்கு ஆரம் மாகி பிற்பகல் 02.30 மணியுடன் நிறைவடைவதுடன், பிற்பகல் 02.30 மணிக்கு பின்னர் வாக்கெடுப்புக்கு சமூகமளிக்கும் வாக் காளர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள்.

அத்துடன், வாக்கெடுப்பு முடிபுகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்களின் விபரங்கள் அன்றைய தினம் மாலை என்னால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும்.

**முத்துலிங்கம் நந்தகோபாலன்,**
**பிரதேச செயலர்,**
**வேலணை.**

**பிரதேச செயலகம்,**
**தீவுகள் தெற்கு**
**2011.02.24**

(C/480)




குறைசொல்வதையே வழக்கமாகக் கொண்டுள்ளவர்களை நாள்தோறும் காணலாம். அவர்கள் நண்பர்களுக்கு கவலை உண்டாக்குவார்கள். ஆனால் அந்நியரை மகிழ்விப்பார்கள் இல்லாத குறைகளைக் கூறிவருவார்கள்.

- கிரேன்ஸ்

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அவசியத்தை உணரவேண்டும்

போருக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள சமாதான சூழலில், பாதுகாப்புக் காரணங்களுக்காக குடும்பப் பதிவு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போரினால் ஏற்பட்ட காலங்களில் இருந்து விடுபட்ட மக்கள், இயல்பு வாழ்க்கையில் தடம் பதித்து வரும் வேளை, பாதுகாப்புத் தரப்பினர் குடும்பப் பதிவுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பதிவு நடவடிக்கைகள் பொதுமக்களை எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதை எடுத்துக் கூறியே ஆகவேண்டும்.

இந்த நடவடிக்கையானது மக்களைப் பாதிக்கும் என்பதற்காக அதனைப் பற்றி விமர்சிக்கவும் விரும்பவில்லை. அதேவேளை அரசியல் லாபம் பெறும் நோக்குடன் இதனை நாம் அணுகவும் இல்லை.

இதற்கு அப்பால் நின்றே இதனை ஆராய முற்படுகிறோம். பதிவு நடவடிக்கை சரி என்றோ அல்லது பிழை என்றோ வாதாடுவதை விட்டு அதன் அவசியத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளில் குடும்ப விபரங்களையும், குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட புகைப்படங்கள் எடுக்க வேண்டிய தேவையும் இருந்தது.

ஆனால், இன்று நிலைமை அவ்வாறில்லை. இந்தநிலையில் மீண்டும் ஒரு பதிவு நடவடிக்கையானது குடாநாட்டு மக்களைப் பெரும் சிரமத்துக்குள் தள்ளியுள்ளது என்பது யதார்த்தமானதே.

இப்பதிவு நடவடிக்கைகளுக்கு கிராம அலுவலர்களைப் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்த விருப்பது அசௌகரியங்களை ஓரளவு குறைப்பதற்கு வழிவகுக்கும்.

ஏ-9 தரைவழிப் பாதை தடைப்பட்டிருந்த காலத்திலும், வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய நிலையிலும், பாதுகாப்புத் தரப்பினரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் கிராம அலுவலர்கள் குடும்பப் பதிவுகளையும், குடும்ப உறுப்பினர்களைப் புகைப்படம் எடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

தற்போது இவை யாவற்றையும் செல்லுபடியற்றதாக்கிப் புதிய குடும்பப் பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கையானது மக்கள் மத்தியில் பலவிதமான சந்தேகங்களை ஏற்படுத்துவதாக அமைந்து விடுகின்றது.

மக்களின் இந்தச் சந்தேகங்கள் அரசியலில் சுயலாபம் தேட முயற்சிப்பவர்களுக்குத் தீனி போடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக இடம்பெற்று வந்த கொலைகளையும், கொள்ளைகளையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கையாக 24 மணி நேர ரோந்தும், பதிவு நடவடிக்கை என்றும் பாதுகாப்புத் தரப்பினர் கூறி வருகின்றனர்.

இதில் ஓரளவுக்கு உண்மை இருப்பதையும் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஏனெனில், இந் நடவடிக்கை மூலம், பகலிலும், இரவிலும் நடைபெற்று வந்த கொலைகளும், கொள்ளைகளும் தற்போது ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு மக்களை நிம்மதிப் பெருமூச்சுவிட வைத்துள்ளது என்பதை இங்கு கூறித்தான் ஆகவேண்டும்.

எனவே, இந்த நடவடிக்கையானது நடந்து முடிந்த யுத்த காலத்தை மக்களுக்கு மீண்டும் ஒரு தடவை ஞாபகப்படுத்துவதாகவே அமையும் என்பதையும் இங்கு சுட்டிக் காட்டுகிறோம்.

- ஆசிரியர்.

# முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு மனிதாபிமான முறையில் தீர்வு காணப்படும்!

## மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமரும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு மனிதாபிமானத்துடன் நல்ல தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கபபடும் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ். முஸ்லிம் பள்ளி வீதியில் அமைந்துளள வை.எம்.ஏ சந்தைக கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சியானாஸ் தாகிர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாநகர முதல்வர் தொடர்ந்து பேசுகையில்:

தொப்புள் கொடி உறவாக, வாழையடி வாழையாக யாழ் மண்ணில் வாழ்ந்து வந்த முஸ்லிம் சகோதரர்கள் 1990 காலப்பகுதியில் ஒரு மணி நேரத்துக்குள் தமது தாயக மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டதுயர நிகழ்வுக்குப் பின்னர் அவர்கள் பல்வேறு துன்ப துயரங்களையும் அனுபவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த பின் தற்போது தமது பிரதேசத்துக்கு வந்து மீளக்குடியமரும் முஸ்லிம் சகோதரர்களின் பிரச்சினைகளை மாநகர முதல்வர் என்ற வகையில் மனிதாபிமானத்துடன் தீர்வு காண நடவடிக்கை எடுப்பேன்.

யாழ். நடைபாதை வியாபாரிகளில் 60 வீதமானோருக்கு உரிய தீர்வு கிடைத்துள்ளது. கடந்த வாரம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின அனுசரணையுடன் யாழ். பேருந்து நிலைய மேற்குப் பகுதியில் இ.போ.ச பணிப்பாளரிடம் அனுமதி பெற்று நடைபாதை பழவியாபாரிகளுக்கு வெவ்வேறு பழக்கடைகளை அமைத்துக கொடுத்தோமோ அவ்வாறே முஸ்லிம் வியாபாரிகளின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்படும்.

மாநகரசபையிடம் பதிவு உள்ளவர்கள் உரிய ஆவணங்களைச சமர்ப்பிக்கும்போது அவர்களுடைய கடைகள் அவர்களுக்கே திருப்பி ஒப்படைக்கப்படும். ஆவணங்கள் இல்லாமல் இலக்கம் மட்டும் சொல்வதால் பயன் இல்லை. உரிய பதிவுகள் எம்மிடம் இருந்தால் நடவடிக்கை எடுப்பது இலகுவாக இருக்கும்.

சிவில் நிர்வாகம், தேசிய சட்டப் பிரச்சினை, மாநகரசபை அதிகாரங்கள் என்பவற்றுக்கு அமைவாக என்னால இயன்றவரை பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (10)

# கல்விசார் போட்டிகள்

(கொக்குவில்)

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். மத்திய கல்லூரியில் சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம், கல்விக் குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கல்விசார் போட்டிகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பேச்சுப்போட்டிகளும், கவிதைப் போட்டி, திருக்குறள்,மனனப்போட்டி என்பன அன்றைய தினம் நடாத்தப்பட உள்ளன. இப் போட்டிகளில் கலந்து கொள்ள விண்ணப்பித்துள்ள மாணவ, மாணவிகள் காலை 8 மணிக்கு யாழ்.மத்தியகல்லூரிக்கு வருகை தருமாறு கோரப்படுகின்றனர். (68)

# தொலைத்தொடர்பு நிலையத்தில் திருட்டு

(ஊர்காவற்றுறை)

காரைநகர் வலந்தலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு வேளையில் தொலைத்தொடர்பு நிலையமொன்றில் 45 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப் பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள் ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும தொியவருவதாவது:குறித்த தொலைத் தொடர்பு நிலையத்தின் கூரையைப் பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த புகைப்படக் கமரா, கைத் தொலைபேசி மற்றும் மீள்நிரப்பு அட்டைகள் (ரீலோட்) உட்பட பல பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக நிலைய உரிமையாளரால் ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (14)

# வடமராட்சி நல்லொழுக்க நிறுவன மாடிக் கட்டடத்துக்கு போரூட் உதவி

(கரணவாய்)

போரூட் நிறுவனத்தினரின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு வரும் வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் புதிய இரண்டு மாடிக கட்டடத்தின் பணிகள் நிதிபோதாமையை அடுத்து தாமதமடைந்து வருவதாகவும், இதன் காரணமாக அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும தெரிவிக்கப்படுகின்றது.

இக்கட்டடத்தைக் கட்டி முடிக்கப் போரூட் நிறுவனத்தினரால் சுமார் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும், அந்நிதியைக்கொண்டு கட்டத்தின் அரைவாசி வேலைகளை மட்டுமே முடிக்க முடிந்துள்ளது.

இதன் பின்னர் மிகுதிவேலைகளை மேற்கொள்ளவென மேலும் இரு மில்லியன் ரூபா மேற்படி போரூட் நிறுவனம் தருவதாக ஒப்புக கொண்ட போதும் அந்நிதி தரப்படவில்லை. இதன் காரணமாக நல்லொழுக்க நிறுவனத்தின் செயற்பாடுகள் வாடகைக் கட்டடம் ஒன்றிலேயே தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது. இதனால் நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுப்பதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து, நல்லொழுக்க நிறுவனத்தின் கிராமிய சங்கங்கள் ஒன்றிணைந்து இவ்விடயம் தொடாபாக யாழ்.அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளன எனவும் தெரியவருகின்றது. (18)

# துர்நாற்றம் வீசும் கழிவுநீர் வாய்க்கால்



(யாழ்ப்பாணம்)

குருநகர் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள கழிவுநீர் வாய்க்கால் திருத்தப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களும் மிகுந்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கழிவு நீர் வாய்க்கால் புனரமைப்பு வேலைகளுக்கு சுமார் 9,5000 ரூபா நிதி தேவைப்படும் என மாநக ரசபையினால் மதிப்பீடு செய்யப்பட்டபோதும் அது சீர்செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இவ்விடயம் குறித்து கடந்த திங்கட்கிழமை யாழ்.மாநகர சபையில் நடைபெற்ற சுகாதாரக் குழுக் கூட்டத்தின் அமர்வின் போது யாழ்மாநகரசபை உறுப்பினர் ஒருவரால் மாநகரசபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு யாழ்.அலுவலகத்தை மூடுகின்றது

## யாழ்.அலுவலகத் தலைவி புளோரன்ஸ் கிளேட் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தனது யாழ்.அலுவலகத்தை 21 வருட சேவைகளின் பின் மூடிக்கொள்கின்றது என யாழ்.அலுவலகத் தலைவி புளோரன்ஸ் கிளேட் தெரிவித்தார்.

இது தொடர்பாக ஐ.சி.ஆர்.சி செய்தி வெளியீட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

நாம் 21 வருட சேவையின் பின்னர் அலுவலகத்தை மூடுகின்றோம். இலங்கையில் ஐ.சி.ஆர்.சியின் பணி வரலாற்றில் இது முக்கியமான ஒரு கணப்பொழுதாகும். மோதலின் விளைவால் ஏற்படுகின்ற தேவைகளில் உதவுவதற்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் கூட்டிணைந்து பணியாற்றுவதற்கு நாம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக வலிவிழந்தோருக்கும், அங்கவீனர்களான மக்களுக்கும் உதவுகின்ற யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்துக்கான ஆதரவைத் தொடர்ந்தும் ஐ.சி.ஆர்.சி வழங்கும். ஐ.சி.ஆர்.சியானது சார்பு உறுப்புக்களையும், நடமாடும் உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான பொலிப்பு றொப்பலீன் போன்ற மூலப்பொருட்களையும் தொழில்நுட்ப உதவிகளையும் இந்த நிலையத்துக்கு வழங்குகின்றது.

சிறைச்சாலைகளிலும் ஏனைய இடங்களிலும் உள்ள நபர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் இடையிலான குடும்பத் தொடர்புகளைப் பேணும் நோக்குடைய செஞ்சிலுவையின் குடும்பச் சந்திப்புகளுக்கு வசதியளிக்கும் திட்டமானது, இதற்குப் பின்னர் கொழும்பிலுள்ள ஐ.சி.ஆர்.சி அலுவலகத்தின் மூலமும், வவுனியாவிலுள்ள இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளை மூலமும் மேற்கொள்ளப்படும்.

1990 இல் யாழ்.குடாநாட்டில் ஐ.சி.ஆர்.சி பணியாற்ற ஆரம்பித்தது முதல் அதன் மனிதாபிமான செயற்பாடுகளானவை யாழ்.போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பகுதியைப் பாதுகாப்பு வலயமாக உருவாக்கல், யாழ்ப்பாணத்துக்கும், திருகோணமலைக்கும் இடையில் கப்பல் மூலம் நோயாளர்களையும், மருத்துவப் பொருட்களையும் கொண்டு செல்ல வசதியளித்தல் மற்றும் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் நோயாளர்களை விமானம் மூலம் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. என்று கிளேட் தெரிவித்தார்.

பொதுமக்கள் சேவைகளுக்கு ஏ-9 பெருந்தெரு வசதியளிக்காத காலப் பகுதியில் யாழ்.குடாநாட்டில் பொதுமக்கள் சேவைகள் தொடர்ந்தும் வழங்கப்படுவதில் ஐ.சி.ஆர்.சி உதவியது என்றும் அவர் கூறினார். ஐ.சி.ஆர்.சி குடி மக்களையும் யாழ்ப்பாண மக்களுக்கான உணவையும் கொண்டு சென்று அரசாங்கக் கப்பல்களுக்குத் துணையாய் சென்றது. சில சந்தர்ப்பங்களில் ஐ.சி.ஆர்.சி கடிதப் பொதிகளையும், பாடசாலை பரீட்சை வினாத்தாள்களையும் கூட கொழும்புக்குக் கொண்டு சென்றது என்று அவர் மேலும் கூறினார்.

# கல்விக் கழக உறுப்பினர்கள் தெரிவு

(தும்பளை)

தும்பளை விளையாட்டுக் கழகத்தின் கல்விக்கழக அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் கல்விக்கழக உறப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆசிரியர்களான பா.இரகுவரன், செல்வி.ஏ.வரலக்சுமி, மு.காண்டீபன், சி.சபேசன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் சேவை மனப்பான்மை அடிப்படையில் ஆங்கிலம், மற்றும் கணனிவகுப்புகளை இலவசமாக நடத்தவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (62)

# கலாசார சீரழிவுகளில் இருந்து விடுவிக்க பயிற்சி வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

ஆசிய இளைஞர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஜே.ஆம்ஸ்ரோங் இலங்கை வந்துள்ளார். இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆகியோருக்கு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அவரது பயணம் அமைந்துள்ளது.

இந்தியாவில் இளைஞர்களுக்கான சமூக நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து சமூகத்தில் வாழும் இளைஞர்களுக்கு கலாசார சீரழிவிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கான பயிற்சியினை வழங்கி, அவர்கள் வெளிநாடுகளின் ஆடம்பரங்கள், மாயக்கவர்ச்சிகள் போன்றவற்றில் இருந்துவிடுபட தன்னாலான சேவையை ஆற்றி வருகிறார். அத்துடன் இயற்கையில் கிடைக்கும் கழிவுப் பொருட்களை வைத்துக்கொண்டு புதிய சந்தைப்படுத்தலுக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில் இளைஞர்களிடத்தில் புதிய படிப்பினைகளை அவர் மேற்கொண்டு வருகின்றார்.

இதனடிப்படையில் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து தனது படிப்பினைகளை மேற்கொள்ளும் முகமாகவே அவரது விஜயம் அமைந்துள்ளது. தற்போது அவர் யாழ்ப்பாணம், இளவாலை, புங்குடுதீவு, பருத்தித்துறை போன்ற இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு வாழும் இளைஞர், யுவதிகளைச் சந்தித்து கலாசார சீரழிவிலிருந்து அவர்களைத் தடுத்து, மனித விழுமியங்களை மேற்கொள்வதற்கான பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருகிறார். இதுவரை 43 நாடுகளுக்கு விஜயம் செய்து இளையோரிடத்தில் சமூக விழிப்பூட்டலை மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# பாடசாலை மாணவர்களுக்கு அசைவம் கலந்த காலை உணவு

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு உலக உணவுத் திட்டத்தால் வழங்கப்படுகின்ற காலை உணவுடன் மீன் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக ரின் மீன்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலைகளில் இருக்கின்ற உணவுக் குழு ஒரு மாணவனுக்கு 8.5 கிராம் அளவில் இருந்து மீன் உணவினை வழங்கும் என யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ம.பிரதீபன் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

வாரத்தில் இரண்டு நாட்கள் இந்த மீன் உணவு வழங்கப்படும் என்றும் பாடசாலைச் சூழலில் உள்ள ஆலயங்களின் விசேட நிகழ்வுகள் மற்றும் விரத நாட்களில் இந்த மீன் உணவு தவிர்க்கப் படவேண்டும் என்றும் பணிப்பாளரால் முன் அனுப்பிவைக்கப்பட்ட சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (109)

# கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலயப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 க்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. இக் கூட்டத்தில் வலய பாடசாலை அதிபர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

# பயிற்சிப் பட்டறை

(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளில் தரம் 3 வகுப்புகளுக்கு ஆங்கிலப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 க்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

பயிற்சிப் பட்டறைக்கு வரும்போது பாடநூல்களின் வழிகாட்டல் கையேடுகளையும் எடுத்து வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.(11)

# சிறப்புற நடைபெற்ற விளையாட்டுப் போட்டி

(வடமராட்சி கிழக்கு)

மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் க.சந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ந.திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும். கௌரவ விருந்தினர்களாக நாகர்கோவில் 10 ஆவது வீ.ஐ.ஆர் (VIR) படையணி கட்டளையிடும் அதிகாரி கேணல் கே.ஆர்.ரட்ணநாயக்கா, 55 ஆவது படையணி சிவில் மற்றும் பொதுமக்கள் தொடர்பு அலுவலக பொறுப்பதிகாரி ஜானக டீ சில்வாவும்,

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி கிழக்கு கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வடமராட்சி அமைப்பாளர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொணடு சிறப்பித்தனர். (70)

# பழமரக்கன்றுகள் விநியோகம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மருதங்கேணி கிராம அலுவலர் அலுவலகத்தில் பழமரக்கன்றுகள் அண்மையில் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் மா, பலா, எலுமிச்சை, பப்பாசி, மாதுளை ஆகிய பழமரக் கன்றுகள் வழங்கப்பட்டன. (70)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய கனிஷ்ட பிரிவு மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினர், ஆசிரியர்கள் தேசியக் கொடியையும், பாடசாலைக் கொடியையும், இல்லங்களின் கொடிகளையும் ஏற்றி வைப்பதையும், பாடசாலை அதிபர் பொ.சிவானந்தராசா உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் த.திருப்புகழூர் சிங்கம் வெற்றி பெற்ற இல்லத்துக்கு வெற்றிக்கேடயம் வழங்குவதையும் காணலாம். (50)

# சைவப் புரவலர்களின் நன்கொடைகள் சைவத்தையும் தமிழையும் வளர்க்கிறது

(யாழ்.நிருபர்)

தேவாரங்களைப் பண்ணோடு பாடுவதற்குச் சிறுவயதிலிருந்தே பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்குப் பெற்றோரின் பங்களிப்பு அவசியமாகும். பண்ணிசைப் போட்டிகளில் பரிசு பெற்ற மாணவர்களின் நிகழ்வுகள் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன என்று யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தெரிவித்தார்.

சைவபரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தின விழாவில் பிரதம விருநதினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபையின் தலைவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றுகையில் -

புண்ணிய நாச்சியம்மையார் போன்ற புரவலர்கள் வழங்கிய நன்கொடை யாழ்ப்பாணத்தில் சைவ சமயத்தையும் தமிழையும் வளர்க்கப் பெரிதும் பயன்படுகிறது. சைவபரிபாலன சபையினர் அம்மையாரின் நன்கொடைகளை நன்கு பராமரித்து வருகின்றனர். பரீட்சைகள் நடத்துவதோடு மாத்திரம் நின்றுவிடாது, பல்வேறு சமய சமூகப் பணிகளையும் சைவப் பெரியார்களின் விழாக்களையும் செய்து வரும் சைவபரிபாலன சபையின் பணி பாராட்டுக்குரியது.

ஆசிரியர் செல்வவடிவேல் தலைமையில் நடைபெற்ற பட்டிமன்றம் இனிய தமிழையும், நல்ல கருத்துக்களையும் கேட்க வைத்தது. சைவபரிபாலன சபையினரின் பணி மேலும் விரிவடையத் தனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

சிறப்புரை ஆற்றிய யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் வி.கணேசன் தனதுரையில் -

மாணவர்கள் பதிகங்களைச் சரியான பண்ணோடு ஒழுங்கு முறையாகப் பாடப் பழகிக் கொள்ளவேண்டும்.

இன்றைய சமூகத்தில் மாணவர்களின் தவறுகளுக்குப் பாடசாலைகளும் ஒரு காரணமாகும். பாடசாலைகள் மாணவர்களைச் சரியான முறையில் வழிகாட்டவேண்டும்.


அதிபர்கள் சமய ஒழுக்க விழுமியங்கள் பற்றி மாணவர்களுக்குப் போதிப்பதற்கு முக்கியஇடம் கொடுக்கவேண்டும். இன்று மாணவர்களின் ஒழுக்கம் கேள்விக் குறியாக மாறிவருவது கவலைதரும் விடயமாக உள்ளது.

புண்ணியநாச்சியம்மையார் தருமத்தில் சிதம்பரத்தில் அமைந்துள்ள மடம் சைவப் பெருமக்களுக்கு அளப்பரிய பணிகளை ஆற்றி வருகிறது. அவரது தினவிழாவில் பெருந்தொகையானோர் கலந்து கொண்டமை மகிழ்ச்சி தரும் விடயமாகும் என்று கூறினார்.

சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் தலைமையில் குறள்வழி பெரிதும் வலியுறுத்துவது அறத்துப்பால் கருத்துக்களா? பொருட்பால் கருத்துக்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது.

பண்ணிசை, திருக்குறள், மனனப்போட்டிகளில் முதலிடம் பெற்ற மாணவர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் பரிசில்களை வழங்கினார். (10)

# மீண்டும் ஆரம்பமான காபற் போடும் பணிகள்



(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.ஸ்ரான்லி வீதிக்கு காபற் போடும் பணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இவ்வீதிக்கு காபற் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் வீதிக்கு காபற் போடும் இயந்திரத்தில் ஏற்பட்ட பழுது காரணமாக இப்பணிகள் தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக இவ்வீதியின் ஒருபகுதி காபற் போடப்பட்டும், ஒரு பகுதி காபற் போடாமலும் இருந்ததின் விளைவால் பொது மக்களின் போக்குவரத்துக்களில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வந்தது.

இதேவேளை, தற்சமயம் வீதிக்கு காபற்போடும் இயந்திரம் திருத்தப்பட்டு மீண்டும் இவ்வீதிக்கு காபற்போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (பா),(23)

# மெய்வல்லுநர் போட்டி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை சண்முகநாத மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 28 ஆம் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் ப.தேவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக கலவிப் பணிப்பாளர் மு.இராதா கிருஷணன், சிறப்பு விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தீவக அமைப்பாளர் என்.ஜெயகாந்தன் மற்றும் தீவக ஆசிரிய ஆலோசகர் எஸ்.தர்மராசா ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஊர்காவற்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி எஸ். பாஸ்கரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (14)

# குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்



(யாழ்ப்பாணம்)

பெனின்சுலா சுப்பர் மோல் நடத்திய கொள்வனவுக் குலுக்கல் போட்டியில் மூவர் பரிசில்களைத் தட்டிக்கொண்டனர்.

முதலாவது பரிசான குளிரூட்டியை ப.தர்ஷனும், இரண்டாம் பரிசான மைக்ரோ அவனை கு. கரோலியும், மூன்றாம் பரிசான றைஸ்குக்கரை ஜோ.எட்வின்ரனும் பெற்றுக்கொண்டனர்.

## ஆதினியின் இன்றைய பலன்

(25.02.2011 – வெள்ளிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 13

இராகுகாலம் 10.59– 12.29, சுபநேரம் 6.29 –7.59, அட்டமி மு.இ.10.35, அனுசம் மு.இ. 6.57, மரணயோகம், அட்டமி நவமி.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– மதிக்கப்படல், இனபந்துக்கள் உதவி, ஆரோக்கிய மிகுதி.

ரிஷபம்:– சுபச்செலவு, ஆலய தரிசனம், மன அமைதி.

மிதுனம் :– அமைதியில் விருப்பம், உதவிகள் செய்தல், ஆன்மீக ஈடுபாடு.

கடகம்:– பரிசுகள் கிடைத்தல், கொண்டாட்டம், சுபச்செலவு.

சிம்மம்:– காரிய சித்தி, நண்பர் சேர்க்கை, விருந்துபசாரம்.

கன்னி :– பகைவர் நேசம். அன்னியர் உறவு, காரிய சித்தி.

துலாம் :– களியாட்ட விருப்பு, தொழிலால் லாபம், மனைவி வழி உதவி.

விருச்சிகம்:– நிறைவான நிலை, போட்டிகளில் வெற்றி, காரிய ஜெயம்.

தனுசு:– முயற்சி செய்தல், காரிய சித்தி, பேராசைப்படல்.

மகரம்:– பேராசைப்படல், நண்பர் விரோதம், அகாலபோசனம்.

கும்பம் :– பண இழப்பு, தொழிலில் நட்டம், வேண்டாத உறவு.

மீனம்:– நண்பரால் உதவி. மகிழ்வான செய்தி, உடல்நல ஆரோக்கியம்.

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் Room Boy கற்கைநெறியில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த (சா/த) வரை கல்வி கற்று விண்ணப்ப முடிவு திகதியன்று, 16-25 வயதிற்குட்பட்டவர்கள் விண்ணப்பம் செய்ய முடியும்.

தகுதியுடையவர்கள் முழுப்பெயர், பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமை என்பனவற்றைக்குறிப்பிட்டு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட முகாமையாளர், NAITA, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 07.03.2011 இற்கு முன் அனுப்பி வைப்பதோடு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் Room Boy எனக் குறிப்பிடல் வேண்டும் என மாவட்ட முகாமையாளர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

# சிட்டைகளின்றி கள் விற்பனை தீவிர கண்காணிப்பில் பொலிஸார்

(ஊர்காவற்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை நிலையங்களில் கள் விற்பனை செய்யப்படும்போது விற்பனைச் சிட்டை வழங்கப்படாமையால் பாவனையாளர்கள் பெரும் சிரமத்தினை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சங்கங்களின் நிலையங்களில் விற்பனைச் சிட்டைகளின்றி வீதியால் பாவனையாளர்கள் கள்ளினைக் கொண்டு செல்ல முடியாத நிலை இருப்பதாகவும், அவ்வாறு கொண்டு சென்ற பல பாவனையாளர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாத முறையில் சகல பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிலும் விற்பனைச் சிட்டையினை நடைமுறைப்படுத்திப் பாவனையாளர்களின் சிரமங்களை இலகுபடுத்துமாறு எதிர்பார்த்து நிற்கின்றனர்.

இதேவேளை, கிளைகளில் விற்பனைச் சிட்டை போடப்படுகின்றதா என்பதையும் பொலிஸார் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

# 'பொன் அணிகளின் போர்' இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சென் பற்றிக்ஸ் மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான 'பொன் அணிகளின் போர்' என வர்ணிக்கப்படும் மாபெரும் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்மாகின்றது.


யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கிடையிலான இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியே "பொன் அணிகளின் போராக'' இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகின்றது.

94ஆவது ஆண்டாக நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 31 வெற்றிகளையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 16 வெற்றிகளையும் பெற்றுள்ளன. 28 போட்டிகள் சமநிலையிலும், 18 போட்டிகள் கைவிடப்பட்டுமுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இதேவேளை, யாழ். மத்திய கல்லூரி மற்றும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெறும் வடக்கின் மாபெரும் துடுப்பாட்டப் போட்டிக்கு அடுத்ததாக இப்போட்டியே யாழ்ப்பாணத்தில் பிரபல்யம் மிக்கவையும், ரசிகர்களின் பெரு ஆதரவைப் பெற்ற போட்டியாகவும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (20)

### சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி



பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் வீரர்கள்

### வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி



பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர், பயிற்றுநர் ஆகியோருடன் வீரர்கள்

## உலகக் கிண்ணக் கிரிக்கெட்

### தினமொரு தகவல்

முன்னாள் பாகிஸ்தான் அணித தலைவர் இன்சமாம் உல்ஹெக் அண்மையில் பாகிஸ்தான் கிரிக்கெட் பற்றித் தான் கருத்தொன்றைத் தெரிவித்திருந்தார்.

உலகக் கிண்ணக் கிரிகெட் போட்டிகள் தொடங்குவதற்கு முன்னதாக அணியின் இறுதிப் பதினைந்து வீரர்களின் பட்டியலை ஐ.சி.சியிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை கையளித்தபோது அணித் தலைவர் ஒருவரைக் குறிப்பிடாமலே அறிவித்திருந்தது. இது பற்றிப் பேசிய இன்சமாம் ஒரு வகையில் அணியில் மிஸ்பா அணி, அல்ரிடி அணி என்று இரணடை அறிந்தே உருவாக்கிப் பாகிஸ்தான் அணியில் குழப்பங்களை ஏற்படுத்தப் போகிறது என்று கடுமையாகச் சாடியிருந்தார்.

இப்பொழுது உலகக் கிண்ணப் போட்டிகள் ஆரம்பமாகி விட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில் உணவுபூர்வமான விடயம் ஒன்றைப் பற்றி இன்சமாம் பேசுகின்றார். அதுதான் முன்னாள் பாகிஸ்தான் தேசிய அணிப் பயிற்றுவிப்பாளர் காலஞ்சென்ற பொப் பூல்மர் பற்றிய விடயம்.

2007 உலகக் கிண்ணப் போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்றபோது பாகிஸ்தான் பெரிதாகச் சாதிக்கும் அளவில் சுற்றுப் போட்டியல் தன் திறமையைக் காட்டவில்லை. இந்தத் துன்பகரமான நிலையில் பாகிஸ்தான் பயிற்றுநர் பொப் பூல்மர் தனது ஹோட்டல் அறையில் மரணமடைந்திருந்தார். இவரின் மரணம் தற்கொலையா, கொலையா என்று இன்று வரையில் சரியான முடிவு ஒன்று காணப்படவில்லை. அவர்களும் சூதாட்டத்தோடு தொடர்புபடுத்தி இவர் சில விடயங்களுக்கு இணங்காத நிலையில் ஆட்ட நிர்ணயக் காரர்களால் பழிவாங்கலுக்கு உள்ளாகிருக்காலம் என்றும் உறுதிப்படுத்தப்பட்டது. எது எவ்வாறாயினும் இங்கு சொலல வந்தது இன்சாமானி மனப்பாங்கின் உயர்வு பற்றியதாகும். இன்சமாம் கருத்துக் கூறுகையில், இம்முறை அப்ரிடியும், அணி வீரர்களும் பாகிஸ்தானுக்காக இவ்வுயர்ந்த கிண்ணத்தை வெற்றி கொள்ள முழு வீச்சில் போராடும் அதே வேளை, இந்தக் கிண்ணத்தை நாட்டுக்காக மட்டுமன்றி எமது முன்னாள் பயிற்றுநர் பொப் பூல்மருக்காகவும் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் முன்போ, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே எத்தனையோ விடயங்கள் புட்டுப்புட்டு வைக்கப்படுகின்றன. ஆனால் கடந்த உலகக் கிண்ணப் போட்டியின் போது நடைபெற்ற துயரமான சம்பவம் ஒன்றைப் பற்றி எத்தனைபேர் யோசித்தார்களோ தெரியவில்லை. ஆனால் இன்சமாம் சரியான வேளை மறக்க முடியாத மறக்கக் கூடாத விடயம் ஒன்றைச் சரியான கனதியில் எடுத்துக் கூறியுள்ளார். நல்லதொரு மனிதர் இன்சமாம்.


10 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி - 2011

பத்தாவது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு கிரிக்கெட் ஆர்வலர்களிடையே தினமொரு போட்டியை நடாத்தி தினமொரு பரிசில்களை வழங்க தினமுரசு எண்ணியுள்ளது

38 நாட்கள் மட்டுமே நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டிகள் தொடர்பாக தினமுரசில் கேட்கப்படும் கேள்விகளுக்கான சரியான விடைகளை தினமும் அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள் .

வெற்றியாளர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

38 வெற்றியாளர்களுக்கான பரிசில்கள் காத்திருக்கின்றன.

எனவே விடைகளை அனுப்புங்கள் பரிசில்களை அள்ளுங்கள்

தினமுரசில் வெளியாகும் கூப்பனில் மட்டும் விடைகளை எழுதி அனுபப்வேண்டும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம்

போட்டி இல.3

அனுப்ப வேண்டிய முகவரி:-

தினமுரசு விளையாட்டு அரங்கு,
இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

ICC Cricket World Cup 2011

தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.

1) பெப்ரவரி 27 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்திய மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறப்போகும் அணி எது?

2) இப்போட்டியின் ஆட்ட நாயகன் யார்?

பெயர்: ........................................
முகவரி : ........................................
போ.இல : ........................................
விடைகள் : 01) ........................................
02) ........................................

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| தினமுரசு காரியாலயம் | தினமுரசு விளம்பரப் பணிமனை |
|---|---|
| 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். | M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |

விடைகளை 27 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.


# நியூஸிலாந்தில் ஏற்பட்ட பூகம்பம் பலியானோர் 400ஐத் தாண்டியது

நியூசிலாந்தில் இடம்பெற்ற பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 400 ஐத் தாண்டிவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நியூசிலாந்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் கிறிஸ்ட் சர்ஜ் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் கட்டடங்கள் இடிந்து விழுந்தன. இதில் சிக்கி ஏராள மானோர் உயிர் இழந்தனர். அங்கு மீட்புப் பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன. இதுவரை 76 பேரின் உடல்களை மீட்புப் படையினர் மீட்டுள்ளனர்.

பூகம்பத்துக்கு பிறகு 238 பேரைக் காணவில்லை. அவர்கள் அனைவரும் இறந்திருக்க வேண்டும். உடல்கள் இடிபாட்டுக்குள் சிக்கிக் கிடக்கலாம் எனக் கருதப்படுகிறது. அவர்கள் உடல்களை மீட்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. கிறிஸ்ட் சர்ச்சில் உள்ள கதீட்ரல் கட்டடம் என்ற ஒரே கட்டிடத்தில் மட்டுமே 60 இல் இருந்து 120 பேர் வரை பலியாகி இருக்கலாம் எனக் கருதபபடுகிறது.

அந்தக் கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றுவதில் மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது. இன்னும் ஏராளமான உடல்கள் புதைந்து கிடக்கின்றன. கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து ஒருவரை உயிருடன் மீட்டனர். இனி மேல் யாரும் உயிருடன் இருக்க வாய்ப்பு இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மீட்புப் பணிக்கு ஜப்பான் மீட்புப்படையும் வந்துளளது. மோப்ப நாய்களும் வந்துள்ளன. அவர்கள் இடிபாட்டுக்குள் சிக்கிக் கிடக்கும் உடல்களை மோப்பநாய் உதவியுடன் மீட்டு வருகின்றனர்.

காயமடைந்தவர்களில் 164 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. பூகமபத்தினால் மொத்தம் ரூ.240 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக நியூஸிலாந்து அரசு கணக்கிட்டுள்ளது.

## வாய்ப்பு அதிகம்




(டாக்கா)

அயர்லாந்துக்கு எதிரான லீக் போட்டியில் முகமது அஷ்ரபுல் விளையாட வாய்ப்பு உள்ளது என, பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் ஜமி சிடன்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இது குறித்துஅவர் மேலும் தெரிவித்ததாவது: இந்திய அணிக்கு எதிரான முதல் போட்டியில் தோல்வி அடைந்தது ஏமாற்றம் அளிக்கிறது. இப்போட்டியில் அஷ்ரபுல் விளையாடாதது பின்னடைவான விடயம். இவர், அயர்லாந்துக்கு எதிராக இன்றைய போட்டியில் விளையாட வாய்ப்பு உள்ளது. அஷ்ரபுல்லின் தீவிர ரசிகன் நான் என்றார்.

## முதன்முறையாக



(பெங்களூர்)

சச்சின் டெண்டுல்கர் இடது கையில் துடுப்பாட்டப் பயிற்சி எடுத்தது, எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். இது வரை இடது கையில் துடுப்பாட்ட பயிற்சி மேற்கொள்ளாத சச்சின் இவ்வாறு மேற்கொள்வது எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ள அதேவேளை, அவரின் இந்த முயற்சியை பயிற்சியாளர் கிறிஸ்டன் உட்பட அணி வீரர்கள் அனைவரும் பாராட்டியுள்ளனர்.

# ஐ.சி.சி விதியை அமுலாக்கினால் இதுவே எனது கடைசித் தொடர்

### வெதும்புகிறார் அயர்லாந்து வீரர்

(புதுடில்லி)

உலகக் கிண்ணத் தொடரில், முதன் முறையாக சதம் கடந்தது மறக்க முடியாத அனுபவம் என, நெதர்லாந்து சகலதுறை வீரர் ரியான் டென் டிசாட்டே தெரிவித்தார்.

இதுகுறித்து டிசாட்டே கூறியதாவது: உலகக் கிண்ணத் தொடரில், முதல் சதம் அடித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இது எனது வாழ்நாளில் மறக்க முடியாத தருணம் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்து மண்ணில் வரும் 2015இல் நடக்கவுள்ள உலகக் கிண்ணத் தொடரில் பத்து முதல்நிலை அணிகள் மட்டுமே பங்கேற்க முடியும் என்பதால், இது எனது கடைசி உலகக் கிண்ணத் தொடராக அமையலாம்.



தென்னாபிரிக்காவில் பிறந்த நான், அடுத்த உலகக் கிண்ணத் தொடரில், தென்னாபிரிக்க அணிக்காக விளையாடுவேன் என சிலர் கூறுகின்றனர். ஆனால் இது குறித்து இன்னும் யோசிக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக கழகப் போட்டியில் உலகின் தலைசிறந்த வீரர்களுடன் விளையாடினேன். இதேபோல வரும் ஏப்ரல்-மே மாதங்களில், ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா அணிக்காக விளையாட உள்ளேன். இதுபோன்ற முக்கிய தொடர்களில் விளையாடுவதன்மூலம், எனது திறமையை உலகிற்கு வெளிப்படுத்த முடியும் என நம்புகிறேன் என்றார்.

# உருவெடுத்த ரி.வி. விவகாரம்



(புதுடில்லி)

வீரர்கள் அறையில் இருந்த ரி.வி. யை உடைத்த பொண்டிங், தண்டனையில் இருந்து தப்பமுடியாது எனத் தெரிகிறது.

அஹமதாபாத்தில் நடந்த உலகக் கிண்ணத் தொடரின் லீக் போட்டியில், அவுஸ்ரேலிய அணி, சிம்பாப்வேயை வென்றது. இப்போட்டியில் ரன் அவுட்டான ஆத்திரத்தில் இருந்த பொண்டிங், வீரர்களின் ஓய்வறையில் இருந்த ரி.வி.யை உடைத்தார். பின் தனது செயலுக்கு மன்னிப்பும் கேட்டார்.

ஆனால் பொண்டிங்கின் செயல் குறித்து, குஜராத் கிரிக்கெட் சங்கத்தின் (ஜி.சி.ஏ.,) சார்பில் இந்திய கிரிக்கெட் சபையிடம் புகார் தரப்பட, அதை சர்வதேச கிரிக்கெட் சபைக்கு அனுப்பியது.

இதுகுறித்து ஐ.சி.சி., செய்தித் தொடர்பாளர் காலின் கிப்சன் கூறுகையில், எங்களிடம் புகார் வந்தது உண்மைதான். பொண்டிங்கின் செயல் கிரிக்கெட் விதிகளை மீறிய செயல் தான். தற்போது அவுஸ்ரேலிய வீரர்கள் பயணத்தில் உள்ளனர்.

இதனால் அவர்களிடம் தொடர்பு கொள்ளும் வரை, புகார் குறித்த எந்தவிபரமும் தெரிவிக்க முடியாது என்றார்.

## வசிம் அக்ரம் அறிவுரை



(கராச்சி)

சிறிசாந்த் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளப் பழகிக் கொள்ள வேண்டும். அவர் தன்னை இந்தியாவின் சொத்து என்பதை நிரூபிக்க வேண்டும் என பாகிஸ்தான் அணியின் முன் னாள் தலைவர் வசிம் அக்ரம் தெரி வித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறிசாந்த் திறமையான பந்துவீச்சாளர்தான். இதில் எந்த சந்தேகமும் இல்லை. பங்களாதேஷிற்கு எதிராக நெஹ்ரா ஆட முடியாத நிலை ஏற்பட்டதால் சிறிசாந்துக்கு 11 பேர் கொண்ட அணியில் வாய்ப்புக் கிடைத்தது. ஆனால் அவர் எப்போதுமே தன்னை முதல் தேர்வு வீரராக மாற்றிக் கொள்ளவேண்டும். பந்து வீசும்போது ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தினால் அதில் தப்பு இல்லை. பந்து வீசிய பின்னர் ஆக்ரோஷத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றார்.

ICC Cricket World Cup 2011

## இன்றைய ஆட்டம்

**அவுஸ்ரேலியா எதிர் நியூசிலாந்து**
மைதானம் : நாக்பூர்.பகலிரவு ஆட்டம்


**பங்களாதேஷ் எதிர் அயர்லாந்து**
மைதானம் : டாக்கா. பகல் ஆட்டம்

## தென்னாபிரிக்கா வெற்றி

(புதுடில்லி)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 'பி' பிரிவு அணிகளான தென்னாபிரிக்க, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் புதுடில்லி மைதானத்தில் நேற்று பகலிரவு ஆட்டமாக இப்போட்டி இடம்பெற்றது. முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 47.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்கா அணி 42.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக டி.வில்லியர்ஸ் தெரிவானார்.



## தினமுரசு தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்

# SCORE CARD

மைதானம் : புதுடில்லி திகதி : 24-02-2011

நாணயச் சுழற்சி வெற்றி தென்னாபிரிக்கா : முதலில் களத்தடுப்பு.

ICC Cricket World Cup 2011

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கிறிஸ் கெய்ல் | c கலிஸ் b ஜொஹான் போத்தா | 16 |
| 02) டியொன் ஸ்மித் | c&b இம்ரான் தாஹிர் | 29 |
| 03) டரன் பிராவோ | lbw b ஜொஹான் போத்தா | 49 |
| 04) ராம் நரேஷ் சர்வான் | lbw b இம்ரான் தாஹிர் | 119 |
| 05) எஸ். சந்தர்போல் | c பீட்டர்சன் b இம்ரான் தாஹிர் | 01 |
| 06) டுவெய்ன் பிராவோ | run out (மோர்க்கல் வில்லியர்ஸ் | 28 |
| 07) சி. தோமஸ் | c டுமினி b இம்ரான் தாஹிர் | 35 |
| 08) கெய்ரோன் பொலாட் | lbw b டேல் ஸ்ரெயின் | 06 |
| 09) டரன் சமி | lbw b டேல் ஸ்ரெயின் | |
| 10) சுலெய்மன் பென் | c மோர்க்கல் b டேல் ஸ்ரெயின் | |
| 11) கெமர்றோச் | not out | |
| உதிரிகள் | (b 1, lb 3, w 11) | 15 |
| மொத்தம் | (all out : 47.3 ஓவர்கள்) | 222 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) அம்லா | c தோமஸ் b கெமர்றோச் | 14 |
| 02) ஸ்மித் | b கெய்ரோன் பொலாட் | 45 |
| 03) ஜக் கலிஸ் | c சமி b பென் | 04 |
| 04) ஏ.பி.டி. வில்லியர்ஸ் | not out | 107 |
| 05) டுமினி | not out | 42 |
| 06) எவ்.டி. பிளெசிஸ் | | |
| 07) ஜொஹான் போத்தா | | |
| 08) பீட்டசன் | | |
| 09) மோர்னே மோர்க்கல் | | |
| 10) டெல் ஸ்ரெயின் | | |
| 11) இம்ரான் தாஹிர் | | |
| உதிரிகள் | (lb 10, nb1) | 11 |
| மொத்தம் | (3 w; 42.5 ஓவர்கள்) | 223 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ஜொஹான் போத்தா | 06 | 48 | 02 |
| டேல் ஸ்ரெயின் | 7.3 | 24 | 03 |
| மோர்னே மோர்க்கல் | 08 | 35 | 00 |
| ஜக் கலிஸ் | 03 | 21 | 00 |
| இம்ரான் தாஹிர் | 10 | 41 | 04 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சுலெய்மன் பென் | 10 | 51 | 01 |
| கெமர்றோச் | 08 | 42 | 01 |
| டுவெய்ன் பிராவோ | 2.1 | 12 | 00 |
| டரன் சமி | 08 | 40 | 00 |
| கெய்ரோன் பொலாட் | 7.5 | 37 | 01 |

**7 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி. ஆட்டநாயகன் : டி. வில்லியர்ஸ்**

அனுசரணையாளர்:

கட்டடப்பொருட்கள், மிற்சுயி, நிப்போன் சிமெந்து, Dulux, Akzonobel பெயின்ற் வகைகள் (எமர்சன், எனாமல், நிக்கோல், டியூகோ) நஷனல் பி.வி.சி (National PVC) குழாய்கள் மற்றும் எமது நிறுவனத்தால் யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட தரமான முட்கம்பிகள் என்பனவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்


**கஜமுகன் ஹாட்வெயர்**

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2839

ICC Cricket World Cup 2011 (C/481)

# கச்சதீவு அருகே எண்ணெய்க் கிணறு அமைப்பு பல்வேறு தரப்பினருக்கும் பேராபத்து ஏற்படும்

## ஆராய்ச்சியாளர்கள் அச்சம்




கச்சதீவு அருகே இங்கிலாந்து நிறுவனம் எண்ணெய்க்கிணறுகள் அமைக்கவுள்ள பகுதியைக் குறிக்கும் வரைபடம்.

(தூத்துக்குடி)

கச்சதீவு அருகே இங்கிலாந்து நிறுவனம் அமைக்கவிருக்கும் எண்ணெய்க் கிணறுகளால் தமிழக மீனவர்களுக்கு ஆபத்து மேலும் அதிகரித்துள்ளதோடு, மன்னார் வளைகுடாவில் உள்ள அரிய கடல்வாழ் உயிரினங்களுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மீனவ அமைப்புகள், கடல் சூழல் ஆராய்ச்சியாளர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்துக்கு நேர் கிழக்கே உள்ள மன்னார் வளைகுடாப் பகுதி யுனெஸ்கோ அமைப்பால் கடல்சார் தேசிய பூங்காவாக அங்கீகரிக்கப்பட்டு, உயிர்க்கோள் காப்பகமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

அரிய வகை பவளப் பாறைகள், கடல் தாவரங்கள், கடல் பசு, டொல்பின், கடல் அட்டை, கடல் ஆமை போன்ற அரிய கடல்வாழ் உயிரினங்களின் உறைவிடமாக இப்பகுதி திகழ்கிறது. எனவே, இங்குள்ள 21 குட்டித்தீவுப் பகுதிகளில் மீன்பிடிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில், மன்னார் வளைகுடாவை ஒட்டிய கச்சதீவு பகுதியில், இங்கிலாந்தைச் சேர்ந்த கெய்ர்ன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தின் துணை நிறுவனமான கெய்ர்ன் லங்கா என்ற நிறுவனம் எண்ணெய் வளம் குறித்த ஆய்வை மேற்கொண்டு வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் வடமேற்குப் பகுதியில் கச்சதீவு அருகே சுமார் 3 ஆயிரம் சதுர கி.மீ. பரப்பளவில் இந்த ஆய்வை மேற்கொள்ள கெய்ர்ன் லங்கா நிறுவனத்துக்கு இலங்கை அரசு 2008 இல் அனுமதி அளித்தது.

இதற்காக, அந்நிறுவனம் பூகம்பம் தொடர்பான முப்பரிமாண ஆய்வுகளை நடத்தி முடித்துள்ளதாகவும், இப் பகுதியில் 3 எண்ணெய்க் கிணறுகளை இந்த ஆண்டு மத்தியில் அமைக்க அந்நிறுவனம் முடிவு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப் பகுதியில் எண்ணெய்க் கிணறுகள் அமைக்கப்பட்டால் தமிழக மீனவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் என அச்சம் தெரிவித்தார் கடலோர மக்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் எம்.புஷ்பராஜன்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், கெய்ர்ன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் என்ற அந்த இங்கிலாந்து நிறுவனம் இந்தியாவில் தொழில் செய்ய கெய்ர்ன் இந்தியா என்ற பெயரிலும், இலங்கையில் ஆதரவு பெற கெய்ர்ன் லங்கா என்ற பெயரிலும் துணை நிறுவனங்களை நடத்தி வருகிறது.

கச்சதீவு பகுதியில் எண்ணெக் கிணறுகள் அமைக்கப்பட்டால் அந்த திசைக்கே தமிழக மீனவர்கள் மட்டுமல்ல, இலங்கை மீனவர்கள் கூடச் செல்ல முடியாது. புயல், காற்று நேரத்தில் கூட அப் பகுதியில் ஒதுங்க முடியாத நிலை உருவாகும். மீனவர்களைக் கடல் பகுதியிலிருந்து விரட்டிவிட்டு பன்னாட்டு நிறுவனங்களுக்கு கடல் பகுதிகளைத் தாரை வார்க்கும் முயற்சிதான் இது.


மன்னார் வளைகுடா பகுதியல் எண்ணெய் எடுக்கும் முயறசியில் இந்தியா, இலங்கை நாடுகள் கூட்டாக ஈடுபட வேண்டும் என 1974 இந்திய - இலங்கை




ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தான் கச்சதீவு இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தை மீறி இலங்கை செயற்படுகிறது. அதனை இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது என்றார் அவர்.

# எல்லைதாண்டும் மீனவர்களை கைது செய்யலாம் சுட முடியாது

## பிரதமர் மன்மோகன் சிங்



(புதுடில்லி)

தமது எல்லையைத் தாண்டி மீன்பிடிக்க வரும் தமிழக மீனவர்களை இலங்கை அரசு கைது செய்யலாம். ஆனால் சுடுவதென்பதனை எக்காரணம் கொண்டும் ஏற்க முடியாதென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார்.

மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைமீதான விவாதத்தில் பேசிய பிரதமர் மேலும் தெரிவித்ததாவது -

பிரிவினைவாதிகளை எந்த வகையிலும் ஊக்குவிக்க மாட்டோம். காஷ்மீர் அரசைப் பலப்படுத்துவோம். இடதுசாரி பயங்கரவாதி களை மிகவும் எச்சரிக்கை உணர்வோடு அணுகிவருகிறோம். காரணம் எமது மக்கள் குழுவான அவர்களிடமே நாம் பிரச்சினையைக் கையாள வேண்டியுள்ளது.

கடந்த கோடைகாலத்தின் போது காஷ்மீர் பலத்த சோதனைக்கட்டத்தைச் சந்தித்தது. அதுபோன்ற நிலைமை இந்தக் கோடைக்காலத்திலும் ஏற்படுவதை அனுமதிக்க மாட்டோம்.

காஷ்மீரில் புதிதாக ஏற்படுத்தவிருக்கும் வேலைவாய்ப்புகள், அந்த மாநில இளைஞர்கள் மக்களின் மனநிலையை மாற்றும் என்று நம்புகிறேன்.

பாகிஸ்தானுடன் தீர்க்கப்படாமல் உள்ள எந்தப் பிரச்சினைக்கும் தீர்வுகாண திறந்த மனதுடன் உள்ளோம். பாகிஸ்தானும் நம்முடன் நட்பு ரீதியில் பேசித்தீர்க்க முன்வரும் என்று நம்புகிறோம்.

கறுப்புப் பண விவகாரத்தில், அனைத்துக் கட்சிகளுடனும் கூடிப் பேசி, அவர்களின் உதவியுடன் பிரச்னைக்குத் தீர்வு காண முயற்சிப்போம். அவர்களின் ஆரோக்கியமான கருத்துகள் அனைத்தும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சுமுகத் தீர்வு காணப்படும்.

கறுப்புப் பண விவகாரத்தில் எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் வைப்பதைப் போல கறுப்புப் பணத்தை நாட்டுக்கு மீட்க எண்ணுவதில் நாங்களும் ஒருவராகத்தான் உள்ளோம்.

கறுப்புப் பண பதுக்கல் என்பது ஏதோ இந்த 4 அல்லது 5 ஆண்டுகள் உள்ள விவகாரமில்லை. இது ஆண்டாண்டு காலமாக இருந்து வந்துள்ளது என்று அவர் கூறினார்.

# மீனவர் மீதான தாக்குதலை நிரந்தரமாக தடுக்க வேண்டும்

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிரந்தரமாக தடுத்து நிறுத்த, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தி.மு.க நாடாளுமன்ற உறுபபினர் வசந்தி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். மாநிலங்களவையில் குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் வசந்தி ஸ்டான்லி, தமிழக மீனவர்களின் மீதான தாக்குதலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதல்வர் கருணாநிதி மத்திய அரசுக்கு பலமுறை கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலை நிரந்தரமாகத் தடுத்து நிறுத்த, மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# வெள்ளி விருந்து

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு பஞ்சகிருத்தியங்களையும் செய்கின்றார். உலகிலுள்ள சகல ஜீவராசிகளையும் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுகின்ற இறைவன் எல்லாம் அறிபவர் எல்லாம் வல்லவர் என்ற உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது.

நாம் ஒரு பானையைப் பார்க்கிறோம், ஒரு மேசையைப் பார்க்கிறோம். அது திடீரென்று வானத்திலிருந்து குதித்ததா? இல்லையே! யாரோ ஒரு மனிதராலேயே அது உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே இந்த உலகத்தையும் அதில் வசிக்கும் ஜீவராசிகளையும் இறைவன் ஒருவராலேயே படைத்துக் காத்து ரட்சிக்க முடியும் என்பதை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும்.

ஆதலால் எமது உடம்பில் உயிர் இருக்கும் பொழுதே நாம் நல்லனவற்றைச் செய்துவிடவேண்டும். நீர்க்குமிழிக்கு நிகரானது யாக்கை. உடம்பிலிருந்து உயிர் பிரிந்துவிட்டால் பிறகு உடம்புக்கு மதிப்பில்லை. தீயிட்டு எரிக்கப்படும் மனித உடம்பைக் காப்பாற்ற நாம் என்னென்ன வெல்லாமோ செய்கின்றோம். “முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பல்” என்பது ஆன்றோர் வாக்கு. ஆகவே, அழியும் இத்தேகத்தை வளர்க்க உண்மையான மிக நேர்மையான வழியிலேயே பொருளைச் சம்பாதிக்க வேண்டும்.

பணத்தைத் தேடுவதற்குப் பல வழிகள் இருந்தாலும் நேர்வழி ஒன்றுதான் உகந்த நல்வழி. எனவே நல்ல வழியில் தேடிடும் பணமே நின்று நிலைத்திருக்கும். தீயவழியில் மற்றவர்களை மனம் நோகச் செய்து ஏமாற்றித் தேடிய பணம் விரைவில் அழிந்து போய் விடும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் இறைவன் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றார். இரண்டாம் பேருக்கும் தெரியாமல் நாம் செய்த காரியம் கடவுளுக்குத் தெரியும்.

நாங்களோ இது வேறு ஒருவருக்கும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோம். இது எத்தனை அறிவீனம்?

இதனால் நல்ல நேர்மையான தூயவழியே மிகவும் சிறந்த பயனைக் கொடுக்க வல்லது என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே, இன்று முதல் எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி, நம் வாழ்வை நேர்வழியில் நடத்தி எமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கக் கூடிய நல்வாழ்க்கையை அமைத்துக் கொண்டு நற்கதி பெறுவோமாக.


சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்

# வாழ்க வளமுடன்

Happy Birthday!


## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

### இரண்டாவது அகவையில்



பெயர்: தி.திலக்ஷன்
முகவரி: 07, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### நான்காவது அகவையில்



பெயர்: தி.கானுஜா
முகவரி: 07, இராமநாதன் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் “தினமுரசு” தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# இலங்கையின் 2 பிரதான கட்சிகள் தலைகளே இல்லாத கழுதைகள்

## என்கிறார் அமைச்சர் மைத்திரிபால

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றை கழுதைகள் என்று வரணித்து உள்ளார் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன.

பதுளை மாவட்டத்தில் இடம் பெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு முக்கியமாக தெரிவித்தவை வருமாறு,

ஐக்கிய தேசியக் கட்சி மூன்று தலைகளுடன் கூடிய ஒரு கழுதை. அக்கட்சியின் தலைவர் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள துடிக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. கட்சித் தலைவர் பதவியைப் பறிக்கத் துடிக்கின்றார் சஜித் பிறேமதாஸ. கட்சித் தலைமையை கவிழ்க்கத் துடிக்கின்றார் கரு ஜயசூரிய. ஜே.வி.பியோ தலை இல்லாத ஒரு கழுதை. இக் கட்சியிடம் அரசியல் கொள்கை எதுவும் கிடையாது.

இக்கட்சிகள் அரசைக் கவிழ்க்க முயற்சிக்கின்றன. இவை நிச்சயம் தோல்வியைத் தான் அடைய உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்புத்துறைமுகத்திலுள்ள கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் இருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட விடயம் தொடர்பில் பூரண விசாரணை அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு கடல் பாதுகாப்பு அதிகார சபைக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடல் பாதுகாப்பு அதிகார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைப் பரிசீலித்த பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

அத்துடன் பூரண விசாரணை நடத்த கடல் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு துறைமுகப் பொலிஸாருக்கு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தின் தெற்குப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எம்.வீ.சாட் எனப்படும் கப்பலில் இருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதால் குறித்த பகுதிக் கடல் மாசடைந்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை கடற் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அது தண்டனைக்குரிய செயல் எனக் கூறியுள்ள நீதிமன்றம் அது குறித்து பூரண விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டுள்ளது.

# பிளாஸ்ரிக் தராசுகளை பயன்படுத்த தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)


பிளாஸ்ரிக் அளவை முறையிலான தராசுகள் பயன்பாட்டை உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் தடைசெய்வதென நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்துள்ளது.

வியாபார நிலையங்கள், சுப்பர் மார்க்கெட் மற்றும் பொது இடங்கள் ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் இவ்வகையான பிளாஸ்ரிக் நிறுத்தல் கருவிகளின் அளவு முறைகள் முறையற்ற வகையில் உள்ளதனாலேயே அவற்றைத் தடைசெய்யும் தீர்மானத்திற்கு வந்ததாக அதிகாரசபையின் பணியாளர் பிறேமசிறி குமார தெரிவித்தார்.

1995 ஆம் ஆண்டு சட்டத்தின்படி இந்தப் பிளாஸ்ரிக் அளத்தல் கருவிகள் தனிப்பட்ட பாவனைக்காக மட்டுமே ஒழிய பொதுமக்களின் பாவனைக்கு அல்லவென அவர் தெரிவித்தார்.

எனவே இந்தத் தீர்மானத்தை மீறும் எந்தவொரு வியாபார நிலைய உரிமையாளர் அல்லது சுப்பமார்க்கெட் உரிமையாளர் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்களெனவும் அவர்களுக்கு 2500 ரூபா தொடக்கம் 3000 ரூபா வரை தண்டப்பணம் அறவிடப்படுமெனவும் இவ்வாறான அளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் வியாபார நிலையங்கள்,களஞ்சியங்கள் என்பன அதிகார சபையின் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுமெனவும் அவர்தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் கொலை சந்தேகநபருக்கு எதிராக வழக்குத்தாக்கல்



(கொழும்பு)

முக்கிய நபர்களைக் கொலை செய்யத் திட்டமிட்ட புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் குறித்து தகவல் அறிந்தும் அதனைப் பாதுகாப்புப் பிரிவினருக்கு அறிவிக்காமல் இருந்ததாகக் கூறப்படும் சந்தேகநபருக்கு எதிராக கொழும்பு நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தீவிரவாத ஒழிப்புச் சட்டத்திற்கு அமைய சட்டமா அதிபரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயை கொலை செய்ய உதவி, ஒத்துழைப்பு வழங்கிய ரமேஷ் எனப்படும் புலிகளின் உறுப்பினர் குறித்த தகவல்களை மறைத்ததாக சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ் பொறுப்பதிகாரி லக்ஷ்மன் குரே சந்தேகநபர்களுடன் தொடர்பு வைத்திருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதை அடுத்து வழக்கு விசாரணை ஜூலை 2ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களை அதுவரை பொலிஸ் கட்டுப்பாட்டில் வைத்திருக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத்துறைமுகத்தில் எரிபொருள் தாங்கி நிர்மாணம்

(கொழும்பு)

இந்து சமுத்திரத்தைக் கடந்து செல்லும் கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகிக்கும் மையமாக இலங்கையை மாற்றும் நோக்குடன், கொழும்புத் துறைமுகத்தில் மற்றுமொரு எரிபொருள் தாங்கி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 15 கோடி ரூபா செலவில் அமைக்கப்படும் இத்தாங்கி அடுத்த வாரம் திறக்கப்படும் எனத் தெரியவருகின்றது.

இதனூடாக இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் எரிபொருள் களஞ்சிய வசதிகள் விஸ்தரிக்கப்படுகின்றன.

ஐந்து துறைகளில் இலங்கையை ஆசியாவின் கேந்திர நிலையமாக மாற்றும் எதிர்பார்ப்பில் துறைமுகத்தின் இயந்திர ஆழிகளைத்திருத்தி நவீனப் படுத்தும் முயற்சியையும் துறைமுக அதிகாரசபை ஆரம்பித்துள்ளதாகவும் நம்பப்படுகின்றது.

# யுத்தக்குற்றங்களை ஆராய தாம் இங்கு வரவில்லையாம்

## ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்றுள்ளதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆராய தாம் இங்கு வரவில்லையென ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றக் குழுத் தலைவி வவுனியாவில் தெரிவித்துள்ளார்.தமது வருகையின் நோக்கம் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வடக்கு மக்களுக்காக வழங்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றின் மூலம் மக்களுக்குக் கிடைக்கும் பலன்கள் குறித்து ஆராய்வது மட்டுமே என்பதாகவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்கள், மீள்குடியேற்றப்படவுள்ள மக்கள் ஆகிய இரு தரப்பினரையும் பார்வையிட்ட ஐரோப்பிய நாடாளுமன்றப் பிரதிநிதிகள், அந்த மக்களுக்குக் கிடைக்கும் வசதிகள், சுகாதார வசதிகள் என்பன குறித்தும் ஆராய்ந்துள்ளனர்.

# வெள்ள அனர்த்தத்தால் பழுதடைந்த புத்தகங்கள் புதிதாக வழங்கப்படும்

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

கடந்த மாதம் பெய்த கடும்மழையினால் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் பழுதடைந்த,காணாமல்போன பாடப் புததகங்களுக்குப் பதிலாக புதிய புத்தங்களை மாணவர்களுக்கு வழங்க இருப்பதாகக் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் புஸ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பாடப் புத்தகங்கள் பல பழுதடைந்தும் காணாமல்போயுமுள்ளன.

இதில் கிளிநொச்சி,மன்னார், வவுனியா,மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், அம்பாறை, பொலனறுவை ஆகிய மாவட்டங்களிலுள்ள மாணவர்களின் புத்தகங்களே அதிகளவில் சேதமடைந்துள்ளன.

இதனை நிவர்த்தி செய்து மாணவர்களுடைய கற்றல் நடவடிக்கையை முன்னெடுக்கும் நோக்கில் புதிய புத்தகங்களை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக்குத் தேவையான புத்தகங்கள் தொடர்பான விபரங்களை அவ்வவ் வலய கல்வித் திணைக்களங்களினூடாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் அனுப்பி வைக்க வேண்டும்.

இதைவிட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நடமாடும் சேவை ஒன்றை நடத்தவுள்ளோம்.



இச்சேவையினூடாக சேதமடைந்த புத்தகங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் தொடர்பாக ஆராயவுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ.நா செயலர் பான்கீமூனுடன் சந்திப்பு வெளிவிவகார அமைச்சகம் அறிவிப்பு

(கொழும்பு)

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ்,வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க ஆகியோர் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனைச் சந்தித்ததாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ"ம் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் ரொமேஷ ஜயசிங்கவும் சட்ட ஆலோசனை பெறுவதற்காக நியூயோர்க்கிற்குச் சென்றிருந்தனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே இவர்கள் இருவரும் ஐ.நா.வுக்கான நிரந்தர பிரதிநிதி பாலித கோஹன்னவுடன் சென்று ஐ.நா செயலாளர் நாயகத்தைச் சந்தித்திருந்தனர்.

இருப்பினும் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா இவ்வாறான சந்திப்பு இடம்பெறவில்லையென மறுத்திருந்தார்.

வெளிநாடு செல்லும்போது செயலாளர் ரொமேஷ் ஜயசிங்க,பதில் செயலாளரை நியமிக்காமல் சென்றதால் தகவல் பரிமாற்றத்தில் பிரச்சினை உருவாகியதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வடபகுதி உயர்பாதுகாப்பு வலயங்கள் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

சமாதான சூழ்நிலை நிலவி வரும் இலங்கையில் இனங் களுக்கிடையில் நல்லிணக் கத்தை ஏற்படுத்தும் நோக்கில் வடபகுதியில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரச தகவல் பிரிவின் பணிப்பாளர் நாயகம் பேராசிரி யர் ஆரியரத்ன அத்துகலவி னால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் இவ்வாறு தெரி விக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கம் பலவந்தமான குடியேற்றங்களைச் செய்வ தில்லை. அத்துடன் இலங்கை பிரஜையொருவர் எவ்வித பார பட்சமுமின்றி இலங்கையின் எப் பகுதியிலும் காணிகளைக் கொள் வனவு செய்யவும் உரிமையுள் ளவர் என்பதில் அரசு வெளிப் படைத்தன்மை கொண்டதாயி ருக்கின்றது.

இதன்பிரகாரம் பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தில் உள்ள 256 வீடுகள் ஏற்கனவே பொதுமக்களிடம் கையளிக் கப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 392 வீடுகள் மக்களிடம் கை யளிக்கப் படவுள்ளன.

இதைவிட உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள 2500 ஹெக் டெயர் நிலப்பரப்பு விவசாயச் செய்கைக்கு அனுமதிக்கப் படவுள்ளது. இந்த நடவடிக்கை களில் யாழ் உயர்நீதிமன்றத் தால் நியமிக்கப்பட்ட குழு ஈடு பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் உயர் பாதுகாப்பு வலயங்களைக் குறைப்பது தொடர்பான நட வடிக்கைகளை கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கண ஆணைக்குழுவின் பரிந்துரை களை நடைமுறைப்படுத்து வதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப் பட்ட இன்டர் ஏஜன்சி ஆலோ சனைக் குழுவினரால் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 3தசாப்தகால நெருக் கடிகளினால் நிர்வாக உட்கட் டமைப்புக்களும் தனியார் மற்றும் பொதுத்துறை ஆவ ணங்களும் அழிவுபட்டிருந்த நிலையில் காணிப்பிரச்சினை சம்பந்தமாக பொது மக்களிடை யேயுள்ள துன்பங்களையும் மனவேதனைகளையும் நீக்குவதற்காக அரசு தேவை யான நிர்வாக நடவடிக்கை யை மேற்கொண்டது.

சிக்கலான இந்தப் பிரச் சினையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதிப் பரிந்துரைகளுக்காக காத்திருக் கும் அதே நேரத்தில் அரசு காணி கச்சேரி முறையினைக் கவனத்தில் எடுத்தது.

மீள்குடியேற்றத்திற்காக அதிக அளவில் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்காக கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கை துரிதப்படுத்தப் பட்டது.

அரசு எங்கெல்லாம் குடிய மர்ந்திருந்ததோ அக்காணி களின் உரிமையாளர்களுக்கு அதற்கான வாடகையை வழங் கியது.

முன்னர் விடுதலைப்புலி களின் உடமைகளாயிருந்த காணிகளை சட்டத்திற்கு புறம் பாய் பிரித்தளித்த போது மேலும் சிக்கலான பிரச்சினை கள் எழுந்தன. அக்காணிகளை உண்மையான உரிமையாளர் களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

# கையடக்கத் தொலைபேசிப் பயன்பாடு போக்குவரத்துப் பொலிஸாருக்கு தடை

(கொழும்பு)

வேலை நேரங்களில் கை யடக்கத் தொலைபேசி பாவிக் கும் போக்குவரத்து பிரிவுப் பொலிஸாருக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுக்கப் படுமென போக்குவரத்து பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

தலைமை அதிகாரி மாத் திரமே கையடக்கத் தொலை பேசியைப் பயன்படுத்தலாம். ஏனையோர் தமக்கு உத்தி யோக ரீதியாக வழங்கப்பட்ட தொடர்பாடல் சாதனங்களை யே பயன்படுத்த வேண்டுமென வும் அந்த அதிகாரி குறிப்பிட்டார.

மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவாறு கையடக்கத் தொலைபேசியை பாவிப் பதற்கு தடை செய்யப்பட்டுள்ள தாகவும்அவர் கூறினார்.

பொதுமகன் ஒருவர் வாக னம் செலுத்தும்போதோ அல் லது மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போதோ கையடக் கத் தொலைபேசியைப் பாவித்தால் அவர்கள் நீதி மன் றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் களென்பதுடன், அது குற்றமாக நிரூபிக்கப்பட்டால் குறைந்த பட்சம் 1,500 ரூபா தண்டம் விதிக்கப்படுமெனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தோப்புக்காடு, பலகாடு பகுதிகளில் மீள்குடியமர்வதற்கு மக்கள் ஆர்வம்

(கொழும்பு)

காரைநகர் உயர்பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட தோப்புக் காடு மற்றும் பலகாடு பகுதி களில் இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், சுமார் 70 குடும்பங்கள் மீள் குடியமர்வதற்கு ஆர்வமாக உள்ளதாக காரைநகர் உதவி அரசாங்க அதிபர் இ.ஜெயசீலன் தெரிவித்தார்.

தோப்புக்காடு பகுதியில் 200இற்கு மேற்பட்ட குடும்பங் களும் பலகாடு பகுதியில் 70இற்கும் மேற்பட்ட குடும்பங் களும் வசித்து வந்துள்ளன. இவர்களில் சுமார் 70 குடும் பங்கள் மீள்குடியமர்வதற்கு ஆர்வமாகவுள்ள நிலையில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையுடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தோப்புக்காடு மற்றும் பலகாடு பகுதிகளில் மீள்குடி யமர்வதற்கு விருப்பம் தெரி வித்துள்ள 70 குடும்பங்களில் ஒவ்வொரு குடும்பம் பற்றியும் தற்போது விரிவாக ஆராய்ந்து வருகின்றோம். பின்னர் இது தொடர்பில் யாழ்ப்பாண அர சாங்க அதிபருக்கு அறிவித்து இக்குடும்பங்களை மீள்குடி யமர்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார்.

யுத்தம் காரணமாக 20 வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த இடங்களை விட்டு இக்குடும்பங்கள் இடம்பெயர்ந்த தாக காரைநகர் உதவி அர சாங்க அதிபர் இ.ஜெயசீலன் தெரிவித்தார்.

# சிகரட், பீடி நுகர்வில் வீழ்ச்சியெனத் தகவல்

(கொழும்பு)

கடந்த சில வருடங்களில் சிகரட்,பீடி உற்பத்தி, இறக்கு மதி,பாவனை என்பன குறிப் பிடத்தக்க அளவு குறைந்துள்ள தாக நாடாளுமன்றத்தில் தெரி விக்கப்பட்டது.

2005ஆம் ஆண்டு 4935 மில்லியன் சிகரட்டுகளும் 3000 மில்லியன் பீடியும் நுகரப்பட்ட தாகவும் 2006ஆம் ஆண்டு 4623 மில்லியன் சிகரட்டுகளும் 2538 மில்லியன் பீடியும் நுகரப்பட்ட தாகவும் அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2009ஆம் ஆண்டு 4200 மில்லியன் சிகரட்டு களும் 2279 மில்லியன் பீடியும் நுகரப்பட்டுள்ளன. 2004ஆம் ஆண்டில் 5002 மில்லியனாக இருந்த உள்ளூர் சிகரட் உற் பத்தி 2009 ஆம் ஆண்டு 4101 மில்லியனாகக் குறைந்துள்ளது. 2005 ஆம் ஆண்டு 3000 மில் லியனாக இருந்த பீடி உற்பத்தி 2009 ஆம் ஆண்டு 2279 மில் லியனாகக் குறைந்துள்ளது.

அரசாங்கம் 2004 ஆம் ஆண்டு 150,285மில்லியன் கிலோகிராம் சிகரட்டுகளை இறக்குமதி செய்திருந்தது. 2009 ஆம் ஆண்டு சிகரட் இறக்கு மதி 36,509 மில்லியனாகக் குறைந்திருந்தது.

# எலிக்காய்ச்சல் நோயால் 400பேருக்கு மேல்பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கடந்த இரண்டு மாத காலப்பகுதிக்குள் எலிக்காய்ச்சலினால் 400 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 7பேர் இறந்துள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரி விக்கின்றன.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சு தெரிவிக்கையில், 4 பேரே இக்காய்ச்சலினால் இறந்துள்ளதாகவும் இந்த நோயினால் பாதிக் கப்பட்ட பெரும்பாலானோர் அநுராதபுரம்,கொழும்பு,கம்பஹா ஆகிய மாவட்டங்களிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தகவலின் பிரகாரம் இந்நோயினால் 383 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 2பேர் இறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தல் வன்முறை 127 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்பட்ட தினத்திலி ருந்து இதுவரை 127 வன் முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக சுதந்திரமானதும் நீதியானது மான தேர்தலைக் கண்காணிக் கும் அமைப்பான கபே அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்புத் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் 5 சூட்டுச்சம்பவங்கள் பதிவு செய யப்பட்டுள்ளதுடன் வேட்பாளர் களை அச்சுறுத்தும் சம்பவங் களும் இடம்பெற்றுள்ளமை குறித்தும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தேர்தல் வன்முறைச் சம்ப வத்தினால் 28பேர் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதைவிட 76 தேர்தல் வன் முறைச் சம்பவங்கள் பவ்ரல் அமைப்பில் பதிவு செய்யப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை தேர்தல் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டில் 62 சந் தேக நபர்கள் கைது செய்யப் பட்டு நீதிமன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் தொடர்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் காமின் நவரட்ண தெரிவித்தார்.

எனினும் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்ட பல சந்தேக நபர்கள் பிணை யில் விடுதலை செய்யப் பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கடற்றொழிலாளர்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கு நடவடிக்கை



(கிளிநொச்சி)

கடற்தொழிலாளர்களின் வாழ்க்கையை வளப்படுத்த நாம் என்றும் அக்கறையோடு செயற்படுவோம். அதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம் என யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

கடந்த 22ஆம் திகதி கிளி நொச்சி மாவட்டசெயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட கடற் தொழிலாளர்களின் பிரச்சினை களை ஆராயும் கலந்துரை யாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்தொழிலும் பிரதான வளமாகக் காணப்படுகின்ற காரணத்தினால் இதிலுள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து கடற்தொழிலை வளப்படுத்த வேண்டிய தேவையுள்ளது.

இதைவிட இரணைமடுக் குளம் உள்ளிட்ட பல குளங் களினூடாக நன்னீர் மீன்பிடித் தொழிலை மேம்படுத்துவதற் கான நடவடிக்கைகளைத் தற்போது மேற்கொண்டுவரு வதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன், நீரியல் வள அதி காரிகள், கடற்தொழில் சமாச பிரதிநிதிகள் உள்ளிட்டபலர் கலந்துகொண்டனர். (29)



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற "புலர்ந்தது புதுவசந்தம்" கலாசார நிகழ்வில் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலய மாணவிகளின் சல்லாரி நாட்டிய நாடகம் இடம்பெற்றது.

இம்மாணவிகளின் திறமையை ஊக்குவிக்கும் முகமாக நெறிப்படுத்திய ஆசிரியர் மற்றும் மாணவிகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் வாழ்த்தி அவர்களை கௌரவப்படுத்தியுள்ளார். (29)

# அவசரகால சட்டத்தை எதிப்பவர்களே சட்டம் நீழப்பதற்கான புறசூழலை உருவாக்கினர்

## நாடாளுமன்றில் உதயன் எம்.பி. உரை

(யாழ்ப்பாணம்)

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பாக சில தரப்பினர் தமது எதிர்ப்பினைக்காட்டிவருகின்றபோதிலும், அவர்களே இச்சட்டம் நீடிப்பதற்கான அக, புறச்சூழலை உருவாக்கி வருகின்றனர். இவ்வாறு நாடாளுமன்றத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

அவர் ஆற்றிய நீண்ட உரையின் விபரம் வருமாறு:

அவசரகாலச் சட்டம் என்பது நாட்டைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவசியமானதாக உள்ளது. அதேவேளை, இந்தச் சட்டம் நீண்ட காலத்துக்கு நீடிக்குமானால், அதுமக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் வழியேற்படுத்திவிடும். எனவேதான், அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பாக சில தரப்பினர் தமது எதிர்ப்பினைக் காட்டிவருகின்றனர்.

ஆனால், இவர்களே அவசரகாலச் சட்டம் நீடிப்பதற்கான அக -புறச் சூழலை உருவாக்கி வருகின்றனர். வெளித்தோற்றத்திற்கு தாம் அவசரகாலச் சட்டத்திற்கு எதிரானவர்களைப் போலக் காட்டிக்கொண்டு அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான ஏதுநிலைகளை இவர்கள் ஏற்படுத்துவதால், இவர்களே அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரதான காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர். இதுதான் இந்த நாட்டின் அவலம்.

முழுமையான அமைதிச் சூழலில்தான் எல்லாவகையான உத்தரவாதங்களும் உறுதிப்படுத்தப்படும். மக்களின் பாதுகாப்புத் தொடக்கம், பொருளாதார அபிவிருத்தி, வாழ்வாதார மேம்பாடு, அரசியல் உரிமைகள் எனச் சகலதும் நிறைவான அமைதிச் சூழலில்தான் உருவாக முடியும்.

இதனால் தான் கடந்த சில வாரங்களுக்கு முன்னர், யாழ்ப்பாணக் குடாநாட்டிலே நிலவிய அசாதாரணமான சூழ்நிலை குறித்து கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தமது கவனத்தையும் கவலையையும் வெளிபடுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணத்தில் நிலவிய அந்த அசாதாரண நிலைமை தொடர்பாக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முதலில் மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதன் பின்னர், யாழ்ப்பாணத்தின் சட்டம், ஒழுங்கு மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இப்போது அங்கே அமைதிச் சூழல் நிலவுகிறது. மக்களிடையே நிலவிய பதற்றமான சூழ்நிலை தணிந்துள்ளது. இதற்காகப் பாடுபடும் அனைவரையும் இங்கே நாம் பாராட்டுகின்றோம்.

அமைதிச் சூழலின் உருவாக்கத்தில்தான் நாடு அபிவிருத்தி அடையமுடியும். அமைதிச் சூழல் ஒன்றைப் பேணுவதன் மூலமாகத்தான் மக்களின் பாதுகாப்பையும் முன்னேற்றத்தையும் நாம் உறுதிப்படுத்த முடியும்.

இதனை இந்த அரசாங்கம் மிகத் தெரிவாகவே புரிந்து வைத்திருக்கின்றது என்றபடியால்தான் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்தம் முடிவுக்கு வந்தபின்னரும் சில அசம்பாவிதங்களும் விரும்பத்தகாத செயல்களும் நடைபெறுவதற்குச் சில சக்திகள் காரணமாக இருக்கின்றன. இதைத்தான் இங்கே நாம் கவனிக்க வேண்டும். இந்தச்சில தீய சக்திகள் மக்களின் அழிவிலும் நாட்டின் அழிவிலும் அவலத்திலும் அரசியல் லாபம் தேட முனைகின்றன.

இது தொடர்பாகவே நாம் விழிப்பாக இருக்கவேண்டியுள்ளது.

அமைதிச் சூழலைக் கெடுப்பதிலும் மக்களை அவல வாழ்விற்குள் தள்ளுவதிலும் குறியாக இருக்கும் இந்தச் சக்திகளைக் கட்டுப்படுத்துவதற்காகவே அவசர காலச் சட்டம் தேவைப்படுகின்றது. ஆனால் எந்தக் காரணங்களையிட்டும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதை நாம் வரவேற்க முடியாது. ஆனாலும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கவேண்டிய சூழல் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அமைதி, சமாதானம், அபிவிருத்தி, அரசியல் உரிமைகள் என்ற தொடர் நிகழ்ச்சி நிரலை ஒருங்கிணைந்த செயற்திட்டத்தை நாம் அடிப்படையாகக் கொண்டுள்ளோம். எமது இந்த நிகழ்ச்சி நிரல் இன்று வெற்றியடைந்து வருகின்றது. இதனை இப்போது மக்களும் புரிந்து வருகின்றனர்.

இப்போது யாழ்ப்பாணத்தில் மீன்பிடி, விவசாயம் ஒரு முக்கிய நிலையை அடைந்துள்ளது. கடந்த வாரம் இந்திய மீனவர் தொடர்பாக எழுந்த பிரச்சினை இப்போது தணிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் எமது மீனவர்களின் பிரச்சினை இன்னும் அப்படியேதான் உள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினை குறித்து அரசாங்கம் இப்போது கூடிய கவனம் செலுத்தியுள்ளது. இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பாக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களும் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றார்.

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்துவதிலும் அந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் நாம் வெளிப்படையாகச் செயற்பட்டுவருகின்றோம்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்கரைக்கு அழைத்து வரப்பட்ட போது அங்கே எமது அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நின்றுள்ளார். பின்னர் இந்த விவகாரம் தொடர்பாக அவர் அரசாங்கத்துடனும் பிற சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனும் பேச்சுக்கள் நடாத்தினார்.

ஆனால், இந்தச் சந்தர்ப்பத்தில் சில அரசியல் சக்திகள் கழுவும் தண்ணீரில் நழுவும் மீன்களாக, மதில் மேல் பூனைகளாக சந்தர்ப்பவாத அரசியலை நடத்தியுள்ளனர். இதைப் புரிந்துகொள்ள வேண்டும்.



உண்மையில் இந்த மீனவர் விவகாரம் இன்று அரசியல் நலன்கள் சம்பந்தப்பட்டதாக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படும் மீனவர்கள் தமது வாழ்வாதாரத் தேவைகளுடன் சம்பந்தப்பட்டுச் செயற்படுவோர். அதிலும் இலங்கைத் தமிழர்களிடத்தில் அன்பும் அக்கறையும் உள்ள தமிழக மீனவர்களே சம்பந்தப்பட்டிருப்பதால், இந்த விவகாரத்தை மிக இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்பது என்னுடைய நம்பிக்கையாகும்.

இலங்கைத் தமிழர்களிடத்தில் தமிழக மீனவர்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் தமிழக அரசியற் கட்சிகளுக்கும், தமிழ்நாட்டு ஊடகங்களுக்கும் அன்பும் அக்கறையும் இருக்குமானால், இலங்கைத் தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரத் தொழிலுக்கு அவர்கள் நெருக்கடியை ஏற்படுத்தமாட்டார்கள்.

எனினும் எமது மீனவர்களின் பாதுகாப்பிலும் வாழ்வாதார மேம்பாட்டிலும் நாம் முழுமையான அக்கறையைக் கொண்டுள்ளோம். இதனை இந்த மன்றிலே உறுதிபட வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன். ஆகவே, நீண்டகாலப் போருககுப்பின்னர் உருவாகிய அமைதியையும் அபிவிருத்தியையும் அரசியல் உறுதிப்பாட்டையும் பேணுவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

### இலங்கையின்....

உடன்படிக்கை நடைமுறையில் இருந்தது.

அதன் பிரகாரம் புலிகளுக்கு சம அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. நிர்வாகம், நீதி மற்றும் வரி அறவிடல் போன்ற கட்டமைப்புக்களை புலிகள் கொண்டிருந்தனர். அந் நிலையில் எவ்வாறு நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது எமக்கு சவாலாக இருந்தது.

புலிகளுடன் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகளை நடாத்தினோம். அமைச்சரவை அமைச்சர் என்ற வகையில் நானும் பேச்சுக்களில் கலந்து கொண்டேன். 2006ஆம் ஆண்டு இரு தடவைகள் பேச்சுக்களை நடாத்தினோம். புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தவிர அவ்வமைப்பின் முக்கியஸ்தர்களான தமிழ்ச்செல்வன், ரமேஷ், புலித்தேவன் உள்ளிட்ட பலரை நான் சந்தித்தேன்.

இந் நிலையில் புலிகளிடம் தீர்வைக் காண்பதற்கான நேர்மை இருக்கின்றதா என எங்களால பார்க்க முடிந்தது. அத்தருணத்தில் நான் ஏன் லக்ஸ்மன் கதிர்காமரை கொலை செய்தீர்கள் என கேட்ட போது, அதற்கு பதிலாக எங்கள் இயக்கத்திற்கு எதிராக செயற்படுபவர்களை கொலை செய்யும் உரிமை இருப்பதாக பாலசிங்கம் பேச்சுவார்த்தை மேசையிலேயே கூறினார்.

அவ் வகையில் புலிகளிடம் எந்தவகையான நேர்மையான அக்கறையும் தீர்வு விடயத்தில் இருக்கவில்லை என்பதையும், அவர்கள் ஒரே நோக்காக செயற்பட்டு வந்ததையும் அறிய முடிந்தது. அந்த நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை விதித்தது.

பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டிய அதேநேரத்தில் நாட்டின் வடக்கு கிழக்கு தெற்குப் பகுதிகளின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாக இருந்தது. ஒருகட்டத்தில் புலிகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருந்தது. அத்துடன், போர் நிறுத்த உடன்படிக்கையை அவர்கள் அதிகளவில் மீறியிருந்தனர்.

அதன் பின்னரே இராணுவத்தினரால் மனிதாபிமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் இன்று யுத்தக்குற்றம் பற்றி பேசுகின்றனர். எந்த வகையிலும் யுத்தக்குற்றம் இடம்பெற்றிருக்கவில்லை. யுத்தத்தின் போது மனிதாபிமான விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டன.

சர்வதேச நாடுகளின் ஆதரவும் எமக்கு கிடைத்தது. எமது நாட்டில் ஆயுதம் தயாரிக்கப்படுவதில்லை. அனைத்து ஆயுதங்களையும் நாங்கள் வெளிநாட்டிலிருந்தே கொள்வனவு செய்தோம். காரணம் புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக மிகவும் பயங்கர அமைப்பாக இருந்தது என்றார்.

### மீண்டும்....

அவர்களுடைய வலைகளை வெட்டி வருவதாகவும் மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, மாதகல் கடற்பரப்பில் மீண்டும் இந்திய மீனவர்களின் அத்துமீறிய பிரவேசம் காணப்படுவதாக வடக்கு மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அண்மைய நாட்களில் இவ்வாறு 6 இற்கு மேற்பட்ட மீன்பிடிப் படகுகள் அத்துமீறிப் பிரவேசித்து தமது 10 லட்சத்திற்கு மேற்பட்ட வலைகளை அறுத்தெறிந்ததாக அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

எனினும் இலங்கைக் கடற்படையினர் இவற்றைக் கண்டும் காணாது அனுமதித்து வருவதாகவும் வடக்கு மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அண்மையில் அத்துமீறிப் பிரவேசித்த இந்திய மீன்பிடி வள்ளங்களுடன் மீனவர்களைக் கைது செய்து எதிர்ப்பை வெளியிட்ட போதிலும் அது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினர் அக்கறையற்று இருப்பதாகவும் குற்றம் சாட்டியுள்ளனர். (100)

### உள்ளூராட்சித்...

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தேர்தல் ஆணையாளரோ அல்லது தெரிவத்தாட்சி அலுவலரோ உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை நடத்துவது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும், எடுக்கக் கூடாதென்று ஒரு தடையுத்தரவையும், தேர்தல்களை நடத்தக்கூடாது என்று மற்றொரு தடையுத்தரவை மேல்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பிறப்பித்துள்ளது.

ஆளுங்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தனது வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு வழங்கப்படும் வரை இந்த தடையுத்தரவு நடைமுறையில் இருக்குமெனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கண்டி மாவட்டத்தின் யட்டிநுவர பிரதேச சபையின் தேர்தலையும் எதிர்வரும் 17 ஆம் திகதி நடத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

ஏற்கனவே ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தாக்கல் செய்திருந்த மனுவின் அடிப்படையில், அக்மீமன மற்றும் மொனராகலை பிரதேச சபைகளின் தேர்தல்களுக்கு, இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

அத்துடன், அக்குரஸ்ஸ பிரதேச சபைக்கான தேர்தலும், சுயாதீன குழு ஒன்றினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவின் அடிப்படையில் தடை செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையில் மஹரகம மற்றும் நிக்கவரட்டிய பிரதேச சபைகள் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி தாக்கல் செய்திருந்த மனு, மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல் நடத்த விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு ரத்துச் செய்யப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## ஒப்பந்தகாரர்களுக்கு இன்று விசேட கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள ஒப் பந்தகாரர்களுக்கான கூட்ட மொன்று இன்று பி.ப 1.30 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். யாழ் மாவட்டத்தில் 2010 ஆம ஆண்டு ஒப்பந்தவேலை செய்ய ஒப்பந்தகாரர்களின் அபிவிருத்தி சம்பந்தமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

### பெண்ணின் சடலம்...

இச் சடலத்தில் வெட்டுக் காயங்களும் காணப்படுவதாக யாழ். ஊர்காவற்துறை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக ஊர்காவற்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதேவேளை, இச் சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் பெரும் பதற்ற நிலை தோன்றியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.



ஏதகர சபை, யாழ்ப்பாணம்.



# சன் சீ கப்பல் தமிழர்களுக்கு நீதிகோரி வழக்குத் தாக்கல்



(கொழும்பு)

எம்.வி.சன்சி கப்பலில் வந்த இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்து சிறையில் அடைத்து வைக்க கனேடிய அரசு சட்டத்தை துஷ்பிரயோகம் செய்கின்றது என்று குற்றம் சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது.

இத்தமிழர்களில் சிலரின் விடுதலைக்கான உத்தரவை நீதிமன்றம் ஏற்கனவே பிறப்பித்து உள்ளது. ஆனால் இவ்வுத்தரவுகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரி அரச தரப்புச் சட்டத்தரணிகள் திரும்பத் திரும்ப நீதிமன்றத்துக்கு மனுக்களைத் தாக்கல் செய்து கொண்டு இருக் கின்றார்கள்.

தமிழர்களைத் தொடர்ந்து தடுத்து வைக்க அரச சட்டத் தரணிகளால் கையாளப்படுகி ன்ற இவ்வுத்தி நீதிமன்ற செயல் பாடு மீதான துஷ்பிரயோக நட வடிக்கை என்று நீதிபதி ஒருவர் கடுமையாகக் கண்டித்து உள் ளார்.

இந்நிலையில், எம்.வி.சன்.சி தமிழர்களில் விடுதலைக்கான உத்தரவு பெற்ற இருவரின் சார்பில் வழக்கு, தாக்கல் செய்யப்பட உள்ளது. சட்டத்தரணி Gab riel Chand வழக்கு தாக்கல் செய்கின்றார்.



யாழ்.நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்று பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. போட்டிகளில் சாதித்த வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்களை நெடுந்தீவு பிரதேச ஈ.பி.டி.பி அமைப்பாளர் றெக்சியன் (றஜீவ்) உள்ளிட்ட விருந்தினர்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

## குளிக்கச் சென்ற மாணவன் மாயம்

(கொழும்பு)

களுவாஞ்சிக்குடி கடலில் குளித்துக்கொண்டிருந்த 8 மாணவர்களில் ஒருவரை காணவில்லை என களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பம் தொடர்பாக தெரியவருவதாவது,

நேற்று மாலை குருமன்வெளியிலுள்ள பாடசாலையொன்றில் சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற 8 மாணவர்கள் களுவாஞ்சிக்குடி கடலில் குளித்துக்கொண்டிருந்தனர். இத்தருணத்தில் ஒரு மாணவனை அலை அடித்துச் சென்றுவிட்டதாக சம்பவத்தை நேரில் கண்ட ஏனைய மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடலில் அடித்துச் செல்லப்பட்ட மாணவனை தேடும் பணியில் களுவாஞ்சிக்குடி பொலிஸாரும் இராணுவத்தினரும் மீனவர்களும் தற்சமயம் ஈடுபட்டுள்ளனர்.

## கிருமிநாசினி தெளித்த விவசாயி வைத்தியசாலையில் அனுமதி

(ஊர்காவற்றுறை)

புகையிலைச் செடிக்கு மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவர் மருந்தின் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்ட நிலையில் ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று புளியங்கூடல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தின் போது அதேஇடத்தைச் சேர்ந்த மா.கோகுலநாதன் (வயது-34) என்பவரே பாதிக்கப்பட்டவராவார். அளவுக்கதிகமாக மருந்தைக் கலந்ததன் காரணமாகவும் காற் றின் போக்கு மாறியிருந்ததன் காரணமாகவுமே இவ் விவசாயி பாதிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (14)

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த க.பொ.த சாதாரண 2010 அழகியல் பாட செய்முறைப் பரீட்சைகளில் இதுவரை தோற்றாத மாணவர்கள் உடன் சம்பந்தப்பட்ட பரீட்சை நிலைய மேற்பார்வையாளருடன் தொடர்பு கொண்டு பரீட்சைக்குத் தோற்றுமாறு வலிகாமம் வலயக் கல்விப பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

தற்போது நடைபெறும் இப்பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தோற்றாத மாணவர்களும் செய்முறைப் பரீட்சையில் தோற்ற முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (26)

### ஐரோப்பிய ஒன்றியம்...

விடயத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தாகத் தெரிகிறது.

அதேவேளை, இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து கருத்துக்களை முன்வைக்க ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு முயற்சிக்கவில்லை என அக் குழுவின் தலைவர் ஜின் லெம்பர்ட் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு வடபகுதிக்கு விஜயம் செய்துள்ளது. வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் விஜயம் செய்த இக் குழுவினர் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே வன்னிப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைக்க முயற்சிக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் தலைவர் ஜின் லெம்பர்ட் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், வவுனியா, செட்டிகுளம், மெனிக்பாம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்த இக் குழுவினர் நேற்று வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச் சந்திப்பில், வடபகுதியின் அபிவிருத்திக்கு என வழங்கியுள்ள உதவிகள் செயற்படுத்தப்படும் விதம் குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கவனம் செலுத்தியுள்ளது.

அதேவேளை, யாழ். அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமாரையும் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற குழுவினர் நேற்றுமுன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பில், போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் பொது மக்களுக்கான தேவைகள் மற்றும் அம் மக்களுக்காக வழங்கப்படும் உதவிகள் உரிய வகையில் கிடைக்கின்றனவா என்பன குறித்து யாழ்.அரசாங்க அதிபரிடம் இக் குழுவினர் கேட்டறிந்து கொண்டனர்.

அத்துடன், உள்ளூராட்சித் தேர்தல், இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் என்பன குறித்தும் இக் குழுவினர் கேட்டறிந்து கொண்டதாக அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வழங்கி வரும் உதவிகள் பொது மக்களைச் சென்றடைகிறதா என ஆராய்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏமாறாதீர்கள்; புதிய எச்சரிக்கை

(கொழும்பு)

பெயர் குறிப்பிடாது நலன்புரி சேவைகள் தொடர்பில் அனுப்பப்படும் குறுஞ்செய்திகளுக்கு ஏமாற வேண்டாம் என்று தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

இவ்வாறான குறுஞ்செய்திகள் தனிப்பட்ட நபர்களினாலேயே அனுப்பப்படுவதாகவும், தொலைத்தொடர்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் இப்படி செய்வதில்லை என்றும் மக்கள் இவற்றினால் ஏமாறக்கூடாது எனவும் தொலைத்தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் பணிப்பாள்ர் நாயகம் அனுஷ பல்பிட்ட கூறினார்.

இதேவேளை, "டயலொக்" கம்பனி, நலன்புரி சேவை தொடர்பான குறுஞ்செய்திகளை வாடிக்கையாளருக்கு அனுப்பியதை ஏற்றுக்கொள்கிறது. இதை "பெரும் கம்பனிகளின் சமூக பொறுப்பு" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அவற்றை நாம் மேற்கொள்கின்றோம் என டயலொக் கம்பனியின் வர்த்தக முதலீட்டு உறவுகள் இணைப்பாளர் இமாஷா கருணாநாயக்க கூறினார்.

அண்மைக்காலங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நிதி சேகரிப்பதற்காக நாம் குறுஞ்செய்திகளை அனுப்பினோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், தாம் ஒரு போதும் பொதுநலன் சேவைக்கு உதவி கோரி குறுஞ்செய்திகளை அனுப்புவதில்லை என்று கூறிய "ஏயார்டெல்" நிறுவனம், எமது வலையமைப்பு ஊடாக பொய்யான குறுஞ்செய்திகள் அனுப்பினால், வாடிக்கையாளர் எமக்கு முறைப்பாடு செய்யும் பட்சத்தில் எம்மால் நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் கூறியது.

### வறிய குடும்பங்களின்...

நடவடிக்கை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் 18 அமைச்சுக்கள் இணைந்து இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவுள்ளன.

இது தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் கடந்த திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் யாழ். செயலக மற்றும் பிரதேச செயலக சமுர்த்தி அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இத்திட்டத்தின்மூலம் கிராம அலுவலர் பிரிவு ரீதியான 100 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு 3 வருடத் திட்டத்தின் கீழ் அவர்கள் வலுவூட்டப்படவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் குடும்பங்களின் ஜீவனோபாயம், தொழில்துறை போன்ற விடயங்கள் இவர்களின் வலுவூட்டலில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதற்கென கிராம அலுவலர், சமுர்த்தி அலுவலர், விவசாய ஆராய்ச்சி அலுவலர், குடும்ப சுகாதார அதிகாரி ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் விவசாய ஆராய்ச்சி அலுவலர் பற்றாக்குறை உள்ளமையினால் கிராம அலுவலர்கள் 25 பயனாளிகளையும் சமுர்த்தி அலுவலர்கள் 75 பயனாளிகளையும் தெரிவுசெய்யவுள்ளனர்.

தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்டத்தை விருத்திசெய்வதற்காக முதற்கட்டமாக 10000 ரூபா வழங்கப்படவுள்ளது.

மேலும் பயனாளிகளின் தொழிற்துறையை விருத்தி செய்வதற்காக சமுர்த்தி வங்கிகளினூடான 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் கடன் வசதிகளும் வழங்கப்பட வுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (26)

## ஆண்டு ஒன்று ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலயத்தில் உள்ள ஆண்டு ஒன்று ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று இன்றும் நாளையும் புலோலி மெ.மி.த.க பாடசாலையில் உள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதில் பங்குபற்றும் ஆசிரியர்கள் ஆசிரிய அறிவுப் பதிவேட்டினையும் மற்றும் உபகரணங்கள், செயல் அட்டை செய்வதற்கான தர உள்ளீட்டுப் பொருட்களை தவறாது எடுத்து வருமாறு வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பாள் பஞ்சலிங்கம் தெரிவித்துள்ளார். (100)

### யாழ். குடாவில்...

செய்யவிருக்கின்றது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் துமிந்த திஸநாயக்க மற்றும் கொரிய அரசின் இலங்கைக்கான தூதுவர் சொய்கி சுல் ஆகியோர் உட்பட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அபிவி ருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஒன்றிணைந்து மேற்படி புதிய செயற்திட்டங்களை இன்று ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

தொடர்ந்து கொக்குவிலில் வியாபார முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவகத்தை வைபவரீதியாக ஆரம்பித்துவைக்கவுள்ளனர்.

அதன்பின்னர் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை அமைச்சர்கள் குழாம் வைபவரீதியாகத் திறந்துவைக்கவுள்ளனர்.

அத்துடன் பனை அபிவிருத்திச்சபையின் செயற்திட்டங்களை மேலும் வலுவாக்கும் நோக்குடன் 5 உழவு இயந்திரங்களை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

### தொழில் முயற்சிக்கான....

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் பெண்புலி உறுப்பினர்களில் பலர் வேலையின்றி சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சமூகத்தில் இணைந்துகொள்வதற்காக இராணுவத்தினரால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் பெண்புலி உறுப்பினர்களில் பலர் வேலை கிடைக்காது கஷ்டப்படுகின்றனர். இருப்பினும், இவர்களில் சிலர் தங்களது வீடுகளுக்கு அருகில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் ஜெனரல் சுதந்த ரணசிங்க குறிப்பிட்டார்.

யுத்தம் முடிவடைந்து 12 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில், அரசாங்கத்தின் புனர்வாழ்வு நடவடிக்கையின் ஒரு பகுதியாக 8,000 பேருக்கு தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 6 மாதங்களில் வடபகுதியில் பெரும்பாலானவர்கள் தமது சமூகத்துடன் இணைந்துள்ளனர். ஆனால், பெரும்பாலானவர்களுக்கு கொழும்பிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பயிற்சி வழங்கப்பட்டது. வடபகுதியில் வருமானத்தை ஈட்டும் வகையிலான திட்டங்களை ஆரம்பிக்குமாறு சர்வதேச நன்கொடையாளர்கள் மற்றும் ஏனைய அமைப்புகளிடமும் கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# கற்றலுக்கான சில குறிப்புகள்

**1) பிராணிகள் பல்வேறு வாழ்விடங்களில் உள்ளன. பிராணிகள் வாழ்விடங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம். இப்பிராணிகள் அமைக்கும் வாழ்விடங்கள் மரக்குச்சிகளாலும், தும்பு, மெழுகு போன்றவற்றாலும் அமைக்கப்பட்டிருக்கும்.**

1) கூடமைத்து வாழ்வன : காகம், தூக்கணாங்குருவி, தேன்குருவி, தேனீ
2) புற்றமைத்து வாழ்வன : கறையான், நண்டு, எறும்பு, எலி
3) ஈரலிப்பான தரை, கற்களின் கீழ் வாழ்வன : தவளை, பாம்பு, நத்தை, மட்டத்தேள்
4) மரப்பொந்துகளில் வாழ்வன : கிளி, மரங்கொத்தி, பாம்பு, நாகணவாய்
5) சமயலறை, கழிவிடங்களில் வாழ்வன : கரப்பான்பூச்சி, எறும்பு
6) மரங்களில் மேல் வாழ்வன : வெளவால், குரங்கு, மலைப்பாம்பு
7) வீடுகட்டி வாழுதல் : மனிதன்

**2) விலங்குகள் வாழ்விடங்களை அமைப்பதன் காரணம்**

1) பாதுகாப்பான வாழ்க்கை
2) உணவு சேமிப்பு
3) முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து பாதுகாக்க
3) குட்டி ஈன்று பாதுகாக்க

குறிப்பு : 1. பிராணிகளின் வாழ்விடங்கள் காலத்திற்குக் காலம் மாறுபடலாம்.
2. ஒரு பிராணியின் வாழ்விடத்தில் பல்வேறு பிராணிகள் ஆதிக்கம் செலுத்தலாம்.
**உதாரணம் : காகம் கட்டிய கூட்டினுள் குயில் முட்டை இடுகின்றது.**

**3) பிராணிகளால் பல்வேறு நன்மைகளும் தீமைகளும் உண்டு.**

1) காகம் : குப்பை கூழங்களை உண்ணும்
2) தேனீ : பூக்களில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும்
3) வெளவால் : தாவர வித்துக்களைத் தூர இடத்திற்குப் பரவச் செய்யும்
4) கறையான் : இலைச்சருகு தடி போன்வற்றை உக்கச் செய்யும்
5) எலி : பயிர் அறுவடைகளைச் சேதமாக்கல்
6) இலையான் : உணவுப் பொருட்களை அசுத்தமாக்கல்

குறிப்பு : 1. காகங்கள்: சூழல் கழிவுகளை உண்ணாதுவிடின் சூழல் மிகவும் அசுத்தமாக இருக்கும். எனவே காகத்தை நகர சுத்திகரிப்பான் என விசேட பெயர் கொண்டு அழைப்பர்.
2. கறையான் : எமது பயன்பாட்டில் உள்ளதையும் அரித்துவிடுவதுண்டு. எனினும் இவை இல்லாது போனால் ஒரே குப்பையும் கூழமுமாய் இருக்கும்.

**4) இலங்கைக்கு உரித்தான பிராணிகள்**

1) பறைவகள் : கானாங்கோழி, புளுணி, நாகணவாய்
2) முலையூட்டி : அழுங்கு, கருங்குரங்கு, மூஞ்சூறு
3) ஈருடகவாழி : மரத்தவளை, தேரை
4) பாம்புகள் : பச்சைப் புடையன், நீர்ப்பாம்பு





தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011
பகுதி - I, II விடைகள்
கல்வி முரசு
வெளியீடு 02
இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்களின் விடைகள்



## பகுதி -I

| | | | |
|---|---|---|---|
| 1) | 03 | 21) | 02 |
| 2) | 01 | 22) | 04 |
| 3) | 01 | 23) | 04 |
| 4) | 02 | 24) | 02 |
| 5) | 01 | 25) | 03 |
| 6) | 01 | 26) | 04 |
| 7) | 01 | 27) | 02 |
| 8) | 02 | 28) | 02 |
| 9) | 02 | 29) | 02 |
| 10) | 02 | 30) | 01 |
| 11) | 02 | 31) | 01 |
| 12) | 03 | 32) | 02 |
| 13) | 01 | 33) | 03 |
| 14) | 01 | 34) | 02 |
| 15) | 02 | 35) | 01 |
| 16) | 03 | 36) | 02 |
| 17) | 02 | 37) | 02 |
| 18) | 02 | 38) | 01 |
| 19) | 01 | 39) | 02 |
| 20) | 02 | 40) | 02 |

## பகுதி -II

**I)** 1) இ.ராஜ்குமார்.
2) இல. 8B 3/2, பெரேரா லேன்,வெள்ளவத்தை, கொழும்பு.
3) 23.01.2008
4) இருவரும் நண்பர்கள்
5) முத்திரை சேகரிக்கும் நோக்கோடு

**II)** 1) கடிதம் 2) முத்திரை 3) நன்றி

**III)** 1) முத்திரைகள், நாடுகள். 2) இன்று 3) நாளை

**IV)** 1) வணக்கம் 2) நண்பன் 3) நன்றி 4) சுகம்

**V)** 1) கடல் 2) திசை 3) மழை

**VI)** 1) விண் 2) தம்பி 3) மழை

**VII)** 1) விண், மேகம், வானம் 2) இடி
3) காற்று
4) வடக்கு தெற்கு, கிழக்கு மேற்கு, ஈசான மூலை அக்கினி மூலை, நிருதி மூலை, வாயு மூலை

**VIII)** 1) விமானம் 2) கார், துவிச்சக்கரவண்டி, புகையிரதம்.
3) கப்பல் 4) புகையிரதம்

**IX)** 1) மண்புழு 2) கங்காரு 3) பல்லி

**X)** 1) உருளை 0 0 2   2) நான்முகி 6 4 4
3) கோளம் 0 0 0   4) சதுரமுகி 12 8 6

**XI)** உருளை   **XII)** 1200.00

**XIII)** 999 999   **XIV)** 180

**XV)** □ =1 △ =6

**XVI)** (5, 4)

**XVII)** 28 ஆண்கள்

**XVIII)** 800 m

**XIX)** 27 kg 850g

**XX)** பி.ப.2 மணி 5 நிமிடம்

**XXI)** 249.8

**XXII)** 80 பேர்

**XXIII)** 100 ரொபிகள்

**XXIV)** ரூபா 31.20

**XXV)**
☆ எழுத்துப் பிழைகளின்றி இருத்தல்
☆ கூறியது கூறலாக இருக்கக்கூடாது
☆ தலைப்பிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.
☆ எழுத்து மொழியில் மட்டுமே எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.


## புள்ளியிடல்

| | |
|---|---|
| வினாத்தாள் I | 40 X 2.5 = 100 புள்ளி |
| வினாத்தாள் II | |
| வினா 01 முதல் 9 வரை | 39X 1 = 39 புள்ளி |
| வினா 10 முதல் 24 வரை | 16X 3 = 48 புள்ளி |
| வினா 25 | 06X 2 = 12 புள்ளி |
| தெளிவான எழுத்து | = 01 புள்ளி |
| மொத்தப் புள்ளி | = 100 புள்ளி |

# இலங்கை பற்றிய சில குறிப்புகள்


### தேசிய இலச்சினை

- ☆ ஒரு நாட்டின் அடையாளம் தேசிய இலச்சினை ஆகும்.
- ☆ தேசிய இலச்சினை இடுவதன் மூலம் அரச பத்திரங்கள் ஆணை இடப்படுகின்றன.




**தேசிய இலச்சினையில் உள்ள அடையாளமும் வெளிப்படுத்தப்படும் விடயங்களும்.**

| | |
|---|---|
| ☆ சிங்கம் | : வீரம் |
| ☆ கலசம் (பூரண கும்பம்) | : சௌபாக்கியம் |
| ☆ சந்திர, சூரியர் | : உலக நிலைப்பாடு |
| ☆ நெற்கதிர் | : சௌபாக்கியம் |
| ☆ தர்ம சக்கரம் | : தர்மமும் சமத்துவமும் |
| ☆ தாமரை மலர் | : சுத்தம் |



- ☆ இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
- ☆ இலங்கைக்கு அண்மையில் உள்ள மிகப்பெரிய நாடு இந்தியா ஆகும். மாலைதீவு, வங்காளதேசம், பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் என்பனவும் இலங்கைக்கு அண்மையில் உள்ள நாடுகளாகும்.
- ☆ இலங்கை பற்றிய வரலாற்றை அறிய மகாவம்சம் என்னும் நூல் உதவுகின்றது.
- ☆ இலங்கை மாங்காய் போன்ற வடிவம் உடைய அழகிய சிறிய தீவாகும்.
- ☆ இங்கு பல இன, மத மக்களும் வாழ்கின்றனர்.
- ☆ இலங்கையானது இரத்தினதுவீபம், செரண்டிப், சிலோன், இந்து சமுத்திரத்தின் முத்து எனப் பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

| தமிழ்ச் சொல் | சிங்களச் சொல் | ஆங்கிலச் சொல் |
|---|---|---|
| **எமது வீடும் அங்கு வசிப்போரும் (ஓசை தமிழில்)** | | |
| 1) அம்மா | அம்மா | Mother |
| 2) அப்பா | தாத்தா | Father |
| 3) அக்கா | அக்கா | Sister |
| 4) அண்ணா | அய்யா | Brother |
| 5) தம்பி | மல்லி | Brother |
| 6) தங்கை | நங்கி | Sister |
| 7) மாமா | மாமா | Uncle |
| 8) மாமி | நந்தா | Aunty |
| 9) பாட்டி | ஆச்சி | Grand Mother |
| 10) பாட்டன் | சீயா | Grand Father |
| **எமது வீட்டில் உள்ள பொருட்கள்** | | |
| 1) கட்டில் | அ(ந்)த | Bed |
| 2) கதிரை | பு(ட்)டுவ | Chair |
| 3) அலுமாரி | அல்மாரிய | Elmira |
| 4) மணிக்கூடு | ஒறலோசுவ | Clock |
| 5) கோப்பை | கோப்பய | Plate |
| 6) பாய் | பதுற | Mat |
| 7) கண்ணாடி | கண்ணாடிய | Class |
| 8) வானொலி | (g)குவன் விதுலியந்ததிரய | Radio |
| 9) தொலைக்காட்சி | நூபவாஹினிய | Television |
| 10) மின்விசிறி | விதுலி பங்காவ | Fan |
| 11) கத்தரிக்கோல் | க(த்)துற | Scissor |
| 12) கத்தி | பிஹிய | Knife |
| **எமது பாடசாலையில் உள்ளவர்கள்** | | |
| 1) அதிபர் | விதுஹல்பதி | Principal |
| 2) ஆசிரியர் | (g)குரு(த்)துமா | Teacher/Master/Sir |
| 3) ஆசிரியை | (g)குரு(த்)துமி | Teacher |
| 4) மாணவன் | ஷிஷ்யயா | Student |
| 5) மாணவி | ஷிஷ்யாவ | Student |
| **எமது வகுப்பறையில் காணப்படும் பொருட்கள்** | | |
| 1) பேனா | பான | Pen |
| 2) பென்சில் | பன்சல | Pencil |
| 3) வெண்கட்டி | ஹுணுகூர | Chalk |
| 4) மேசை | மேசய | Table |
| 5) புத்தகம் | பொ(த்)த | Book |
| 6) கரும்பலகை | களுலால்ல | Black board |





# தமிழ் விளக்கக் குறிப்புக்கள்

**சில சொற்களுக்கான கருத்து விளக்கங்கள்**

1. பௌத்த மதகுரு - பிக்கு/பிக்குணி
2. இந்து மதகுரு - அந்தணர்/குருக்கள்
3. இஸ்லாமிய மதகுரு - மௌலவி
4. கிறிஸ்தவ மதருகு - அருட்தந்தை/அருட்சகோதரி
5. மீன்பிடிப்பவர் - கடற்றொழிலாளி
6. ஆடை நெய்பவர் - நெசவாளி
7. கத்தி செய்பவர் - கொல்லர்
8. மேசை செய்பவர் - தச்சர்
9. மூட்டை தூக்குபவர் - நாட்டாமை
10. சட்டி, பானை செய்வர் - குயவன்
11. சலவை செய்பவர் - சலவைத் தொழிலாளி, வண்ணான்
12. கள்ளுச் சீவுபவர் - சீவல் தொழிலாளி
13. உளவாளி - வேவு பார்ப்பவர்
14. உழவாளி (உழவன்) - நிலம் உழுபவர்
15. களவாழி - திருடியவர்
16. வழக்கறிஞர் - சட்டத்தரணி
17. நீதிபதி - தீர்ப்புக் கூறுபவர்
18. வாதி/வழக்காளி - வழக்கினைத் தாக்கல் செய்தவர்
19. பிரதிவாதி/எதிராளி - குற்றம் சுமத்தப்பட்டவர்
20. சந்தேகநபர் - குற்றம் செய்தார் என சந்தேகிக்கப்படும் நபர்
21. சுற்றவாளி - குற்றம் செய்யாதவர் என நிரூபிக்கப்பட்டவர்
22. குற்றவாளி - குற்றம் செய்தவர் என நிரூபணமானவர்.

**ஐவகை நிலங்களும், பண்புகளும்**

1. குறிஞ்சி - மலையும் மலை சார்ந்த இடமும்
2. முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
3. நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும்
4. மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும்
5. பாலை - மணலும் மணல் சார்ந்த இடமும்
6. ஐங்குரவர் - தாய், தந்தை, குரு, அரசன், தமையன்
7. ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (மணம்)
8. ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி
9. ஐம் பூதம் - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
10. ஐந்தொழில் - படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைதல்

**பேச்சு மொழியில் உள்ள சில சொற்களின் திருத்தமான வடிவங்கள்**

| பேச்சுமொழி | | திருத்தம் |
|---|---|---|
| 1. நாகரீகம் | - | நாகரிகம் |
| 2. சந்தணம் | - | சந்தனம் |
| 3. உடமை | - | உடைமை |
| 4. புடவை | - | புடைவை |
| 5. அடயாளம் | - | அடையாளம் |
| 6. யாவாரம் | - | வியாபாரம் |
| 7. பப்பாளி | - | பப்பாசி |
| 8. முயச்சி | - | முயற்சி |
| 9. பிரச்சனை | - | பிரச்சினை |
| 10. கலாச்சாரம் | - | கலாசாரம் |
| 11. சமாச்சாரம் | - | சமாசாரம் |
| 12. வெங்கலம் | - | வெண்கலம் |
| 13. துறப்பு | - | திறப்பு |

## தனிச் சொற்களுக்குரிய பொருள் விளக்கம்

1. வேட்பாளர் - தேர்வில் போட்டியிடுபவர்
2. தேர்தல் - ஒரு பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்தவற்குரிய தெரிவுமுறை
3. பத்திரிகையாளர் - பத்திரிகைக்குச் செய்தி சேகரிப்பவர்
4. செய்தியாளர் - பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களுக்குச் செய்தி சேகரிப்பவர்.
5. அறிவிப்பாளர் - வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவர்.
6. நாடகம் - நடிப்பு மூலம் கருத்தினை வெளிப்படுத்தல்
7. நடனம் - அங்க அசைவுகள் மூலம் கருத்தை வெளிப்படுத்தல்
8. பாட்டு - சொற்கள், இசை என்பன மூலம் கருத்தை வெளிப்படுத்தல்
9. ஓவியம் - கோடுகள், நிறங்கள், ரூபங்கள் மூலம் கருத்தை வெளிப்படுத்தல்
10. சிற்பம் - கல்லிலோ, மரத்திலோ செதுக்குவதன் மூலம் (குழிவு, குவிவு மூலம்) கருத்தை வெளிப்படுத்தல்.
11. வெள்ளோட்டம் - தேர், கப்பல் ஆகியன புதிதாக முதன் முதலில் செலுத்துதல்
12. அரங்கேற்றம் - முதன் முதலில் தான் கற்ற ஒரு கலையினை மேடையேற்றுதல் (நடனம், மிருதங்கம், இசை)
13. ஒத்திகை - ஒரு நிகழ்ச்சியினை குறித்த இடத்தில் செய்வதன் மூலம் சரிபார்த்தல்
14. வெளியீடு - ஒரு எழுத்தாக்கம் ஒன்றை வைபவ ரீதியாக வெளியிடுதல்.
15. கண்காட்சி - கலைப்படைப்புக்களை மற்றவர் பார்வைக்கு வைத்தல்.
16. அகதி - அனைத்துச் சொத்து, உடைமைகளை இழந்தவன் (கதியற்றவன்)
17. அநாதை - தாய், தந்தையரை இழந்தவன்.
18. ஊதாரி - வீண்செலவு செய்பவன்.
19. உலோபி - தானும் அனுபவியாது பிறருக்கும் கொடுக்காது வாழ்பவன்.
20. வள்ளல் - கேட்கக் கேட்கக் கொடுப்பவன்.
21. தீர்க்கதரிசி - நடக்கப்போவதை முன்கூட்டியே கூறும் ஆற்றலுடையவன்.